Reg. No. M.

ஸமரஸ போதினி.

"The Samarasabodhini"

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

E. சூரியநாராயண அய்யர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., *Editor*.

புத்தகம் 1. | ரௌத்திரி௵ ஆனி௴ ௯௨ 23rd June 1920. தஞ்சாவூர். | பிரதி 2.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறது. இதன்முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனதுடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு ரூ 5—0—0

பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு ரூ 7—0—0

For India, Burma and Ceylon, Rs. 5/a year.

For F. M. S., Natal, etc Rs. 7/a year.

குறைந்த விளம்பர விகிதம்:—

பத்தி 1-க்கு மாதம் 1-க்கு ரூ 20—0—0

இஞ்சு 1-க்கு ரூ 1—0—0

For One month 4 insertions per month per column Rs. 20-0-0.

Casual Advertisements @ 1-0-0. per inch.

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுகிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர். நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோற்கு தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். முழுவிபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர்பெருமான்

III திலகரின் கல்விப்பயிற்சி

(சென்றவார போதினியின் தொடர்ச்சி)

இப்படியிருக்கையில் 1872 ம் ஆண்டு கங்காதரராமசந்திர திலகர் காலகதியடையவும் திலகர்பிரான் தாய் தகப்பனிழந்த திக்கற்ற குழந்தையாயினர். இடிகேட்ட நாகம்போல் திலகர் மனங்கலங்கித் தன் கல்வியைக் கவனித்துச் சீர்திருத்தவும் தனது பணுவிடைகளை யேற்று சீர்வதிக்கவும் தந்தையில்லாப் பாவியானேமே யெனச் சிந்தை நொந்தார். ஆயினும் இவர் நற் காலத்தின் பயனுக் கங்காதார ராமசந்திர திலகரின் சகோதாரும் மைத்துனரும் திலகரின் படிப்பைக் கவனிக்க ஏற்பட்டார்கள். தந்தை மரித்த நான்குமாதங்களில் திலகர் கீர்த்தியுடன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். உயர்தரப் படிப்பை யுத்தேசித்து திலகர் பெருமான் தட்சிண கலாசாலையிற் சேர்ந்து 1815ம் வருடம் எப். ஏயில் தேறினுற் பரீட்சைக்குக் கொஞ்ச நாள் முன் பம்பாய் எம் பின்ஸ்டன் கல்லூரியிற் புகுந்து 1876 ல் பி. ஏ. பரீட்சையில் நண்பர்களுவக்கும்படி முதன்மையாகத் தேறி 1879 ல் எல். எல். பி. யென்வ சட்டப் பரீட்சையிலும் வெற்றியடைந்தனர்.

சட்டப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கையில் திலகருக்கும் அகர்க்கரென்றவோர் வாலிபருக்கும் நெருங்கிய நண்புண்டாயிற்று. அக்காலம அகர்க்கர் எம். ஏ. பரீட்சைக்கு வாசித்துக் கொண்டிருந்தார். இவ்விருவரின் நோக்கங்களும் எண்ணங்களும் ஆலோசனைகளும் ஒரேவிதமாயிருந்ததால் கொஞ்ச நாட்குள் இவர்கள் இணைபிரியா நண்பராயினர். அயலார்யாவரு மிதைக் கண்டு,பாலும் நீரும்போலும் நகமும் சதையும் போலும் கணவன் மனைவிபோலும் இச்சிறுவரின் கூட்டுறவெனப்புகழ்ந்தனர். இவ்விரு நண்பரும் அரசாங்கத்தின் கீழ் உத்தியோக மொன்றும் வகிப்பதில்லை யெனவும் வாழ் நாள் முழுவதும் தேசப்பணியிற் கழிப்பதெனவும் பரமகதியளிக்கும் பரந்தாமன் முன் சத்தியஞ் செய்து கொண்டனர். பாரதபூமிக் கெவ்விதத்தில் நன்மை பயக்குமென்ற ஆலோசனையில் மனவமைதியின்றி எவ்வளவோ இரவுகள் தூக்கமறக்கழித்தனர். கடைசியில் சொந்தமாய் ஓர் பள்ளிக்கூடமேற்படுத்தி ஏழைபிள்ளைகளும் எளிதிற் சேரும்படி வசதியுண்டாக்குவதென்றும் நீடித்திருப்பதும் தேசாபிமானத்தைப் புகட்டுவதுமான கல்வியைப் போதிப்பதென்றும் திலகரும் அகர்க்கரும் உறுதிசெய்து கொண்டார்கள். இச்சிறுவரின் தீர்மானத்தையறிந்த ஊரார் இவர்களை யுலகவனுபவ மில்லாப் பேதைகளென்றும் ஆகாயக் கோட்டைகட்டும் வீண் மனவாதிகளென்றும் எள்ளனஞ் செய்தார்கள். இதைப் பொருட்படுத்தாது திலகர் தன்யோசனைகள் சித்திபெற வேண்டிய வழிகளைத் தேடுவாராயினர்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டது போலும் விஷ்ணு சாஸ்திரிகிபுளங்கரென்ற பெரியோரொருவர் தான்வகித்து வந்த அரசாங்க வுத்தியோகத்தை மேலதிகாரிகளின் அகம்பாவத்தின்பொருட்டுத் துறந்துஒரு பள்ளியுண்டாககுமெண்ணத்துடன் பூனாவிற்குவந்தனர். விஷ்ணுசாஸ்திரியார் கல்விக்கரை கண்ட பண்டிதரி லொருவர். மஹாராஷ்டிர பாஷையில் தன்னை யொப்பாரொவருமில்லை யென்ற பெயர்வாங்கியவர். வசனநடையில் மிகச்சிறந்தவரென்ற கௌரவம் படைத்தவர். இக்கைபகிர்த்திவாய்ந்த விஷ்ணுசாஸ்திரியின் நோக்கங்களை யுணர்ந்து திலகரு அகர்க்கரும் தங்களெண்ணங்களை யிவருக்கு வெளியிட்டார்கள். சில நாட்களில் இம் மூவருக்கும் சிநேகம் முற்றிச் சீக்கிரம் நினைத்ததை யடைந்தனர். இது காலை நாம் ஜோஷியென்ற வொருமகானும் இம்மூவருடன் நாலாவதாக வந்து கலந்தனர்.

III. திலகரும் போதகாசிரியரே.

நம் கட்கும் பெருந்தொண்டியற்றிப்பன்
னூட்டினோர் தங்கலையினு மவ்வவர்
தாமகத்து வியப்பப் பயின்றொரு
சாத்திரக் கடலென்ன விளங்குவோன்.
மாமட்குப் பிறப்பிட மாகமுன்
வாழ்ந்திங்காளில் வறண்டயர் பாரதப்
பூமகட்டு மனந்துடித்தே லிவள்
புன்மை போக்குவலென்ற விரதமே.

திலகர் பிரான், அகர்க்க விஷ்னுசாஸ்திரி, நாம் ஜோஷியென்ற நால்வருஞ் சேர்ந்து 1880ம் வருடம்ஜனவரிமாதம் இண்ரடாந்தேதி பூனநகரில் நூதனவாங்கிலப் பள்ளிக்கூட மொன்றேற்படுத்திய விடத்தில் மிகக்குறைந்த சம்பளம் பெற்று உபாத்தியாயராயிருந்து வந்தார்கள். சூன்மாதக் கடைசியில் ஆப்ட்டு வென்ற மற்றொரு சீமான் இவர்கட்குத் துணையாயினர். இவரும் ஒரே மனதாய் மாணவர்களின் நன்மையைக் கோரித்தங்கள் கவனத்தைப் பள்ளிக்கூட விருத்தியின் பொருட்டுச் செலுத்தலாயினர். இவர்களின் ஒற்றுமையைப் பார்த்துப்பூனவிலுள்ளோர் பூனபஞ்சவரென்றும் கலியுக பாண்டவரென்னும் அழைப்பது வழக்கம் பிரதிதினமும் மாணவரின் தொகையதிகரித்துப் பஞ்சவரின் விடாமுயற்சியினுலும் போதிக்குந் திறனுலும் இந்நூதன வாங்கிலப் பள்ளியானது விரைவில் செழித்தோங்கி மற்பள்ளிக் கூடங்களைக் காட்டிலும் சிறந்ததென்ற புகழடைந்தது.

இத்தன்மைய மேன்மைவாய்ந்த பூனநூதனவாங்கிலப் பள்ளிக்கூடம் அழிந்து நிலையாயிருக்க வேண்டித் திலகரும் அவருடன் ஒத்துழைத்த நாம் ஜோஷி ஆப்ட்டு அகர்க்கர் முதலியோரும் 4884 ம் ஆண்டு தட்சிணகல்விச் சங்கமொன்றை யேற்படுத்தினார்கள். ஆரம்பத்தில் இந்நால்வரும் ஆயுள் பரியந்தவங்கத்தினர்களாய்விளங்கினர். கொஞ்சநாளில்கெல்கர்ஸ்தாகப்ரோல், கோகலே யென்னயோர் கலந்தனர் ஆயுளங்கத்தினர்கள் கலாசாலையில் இருபது வருட முழைப்பதாக வோத்துக் கொண்டவர்கள். தட்சின கல்வி சங்கத்தின் பயனுக அங்கத்தினர் யாவருஞ் சேர்ந்து காடர்வாடா, கபுடர் கானு, முதலிய விளையாட்டிடங்களை விலைக்கு வாங்கியும் நரனுவாடாவை ஸர் ஜேம்ஸ் பர்கூஸன் துரைத்தனத்தார் செய்த வாக்குறுதிப்படி லார்ட் ரீயென்பவரிடமிருந்து வசப்படுத்தியும் சதுர்சிங்குக்குச் சமீபத்தில் கலாசாலைக் கட்டிடங்கட்டியும் 1885 ம் வருடத்தில் ஒரு கல்லூரியைத் தாபித்து அதற்கு பர்கூஸன் கலாசாலை யெனப் பெபர் கொடுத்தார்கள்.

இக் கலாசாலையில் திலகர் பெருமான் எப். ஏ. பீ. ஏ. மாணவர்களுக்குக் கணித போதகாசிரியராயிருந்து வந்தார். ஆங்கில வடமொழியந்திர நூல் முதலிய பாடங்களையும் அவர்களுக்குத் திலகர் அடிக்கடிப் போதிப்பது வழக்கமாயிருந்தது. திலகர்பெருமான் மாணவர் மனதில் நன்குபதியும்படித்தான். கற்பிக்கும் விடயங்களை வாழைப்பழத்திலூசி யேற்றுவதுபோல மெதுவாக அவர்கள் மூளையிலேற்றுவார். எந்தப் பாடத்தைத் திலகர்கையாண்டாலும் அதில் அவருக்குள்ள ஆழ்ந்த ஞானமும்தெள்ளிய அறிவும்வெளியாகும். மற்றவர்போலப் படித்ததை பையன்களிடம் ஒப்பிக்க விடாமல் தன்னறிவின் முதிர்ச்சியால் புதுவிடயங்களைத் தன்மாணவருக்குக்கற்பிப்பார். திலகரின் போதனை சக்தியையும் அவர்வெளிப்படுத்தும் அபிப்பிராயங்களையும் உணர்ந்தவரும் திலகர் நிபுணரென்று புகழாமலிரார். கலாசாலை மாணவர்களுக்குத்திலகரிடத்தில் அளவிலாத வன்பும் மரியாதையுமுண்டு. திலகர் பெருமானின் ஆடம்பரமற்ற நடையுடைபாவனைகளும் அவரது சிறந்த கல்வியும் நுண்ணிய அறிவும் போதிக்குந்திறனும் மாணவரிடத்து அவருக்குள்ள விசுவாசமும் குற்றமற்ற இல்லறவாழ்வும் வைதிகக்குணமும் மாணவர் மனதில் தெய்வமே திலகர் உருவெடுத்து வந்ததெனும் தோற்றத்தை யுண்டுபண்ணிவிட்டனர். சில சமயங்களில் திலகர் தன் கூர்மையுள்ள அறிவை மாணவர்களும் படைத்திருக்கின்றார்களென நம்பி அவர்கள் மனதில் பதியாத அநேக அரிய விடயங்களைப் பற்றிப்பேசுவார். வாலிபர்கள் தான் சொல்வதையறிந்து கொள்ளவில்லையெனத்தெரிந்தவுடன்எவ்விதத்தில் அவ்வபிப்பிராயங்களை யவர்கட்குப் புகட்டவேண்டுமோ அவ்விதமே புகட்டுவார். மற்றுஞ் சில வேளைகளில் கலாசாலைக்கு மிகவும் தாமதித்து வருவார். கணிதத்தில் தன்னை வெல்லுபவரில்லை யென்னுங் கீர்த்திபடைந்தார். பீஜகணிதத்தில திலகரை நிகர்ப்பவர் இந்தியாவிலில்லை யென்றே சொல்லலாம்.

இவ்வளவு சாமர்த்தியமுள்ள திலகர் பெருமாள் 1890ம் வருடத்தில் தட்சிண கல்விச் சங்கத்தினின்றும் பர்கூஸன் கல்லூரியினின்றும் விலகிவிடும் படிச் சில சம்பவங்கள் நேர்ந்தன. இரண்டு வருடங்களாகவே அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராய பேதம் முதிர்ந்து வந்தது. அங்கத்தினர் யாவரும் தங்கள் கவனத்தையும் காலத்தையும் போதிக்குந்தொழிலிலேயேகழிக்கவேண்டுமெனவும் அவர்கள் வெளியிடும் புத்தக வரும்படியாவும் சங்கத்தைச் சேரவேண்டுமெனவும் அதிகாரிகளிடமிருந்து கலாசாலை நிதியடையும் பொருட்டு அங்கத்தினர்கள் சொந்த சுதேச வபிப்பிராயங்களை விட்டு விடக்கூடாதெனவும் திலகர்பிரான் தட்சிண கல்விச்சங்கத்தின் முன்பிரேரேபித்தார். இவ்வபிப்பிராயத்தைச் சிலர் மட்டும் ஒப்புக் கொண்டனரேயன்றிப் பெரும்பாலோர் ஒப்பவில்லை. ஆதலால் திலகர் சங்கத்தினின்றும் தனது அங்கத்தையும் கலாசாலையினின்றும் தனது உத்தியோகத்தையும் விலக்கிக் கொண்டார். இதன் பின் படாங்கர் விலகினர். சில மாதங்களுள் நாம் ஜோஷி நிர்வாகத்தினின்றும் முழுவதும் விலகிவெளிவந்தார். தட்சிண கல்விச் சங்கத்தைத் துறந்தவுடன் திலகர் பெருமான் அநேக வேலைத் தொந்திரவுகளுக்கிடையேசட்டக கல்லூரி யொன்றுண்டாக்கி அதில் மாணவர் கோர்ட்டுவக்கீல் ஜில்லா கோர்ட்டு வக்கீல் பரீட்சைகளுக்குத் தயார்செய்து வந்தார். இத்தகைய போதனுசாலையம்பாய் மாகாணத்திற்கே நூதனமானது. சட்டத்தில் திலகருக்குள்ள பயிற்சி அளவிற்கரியது. சட்டத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் நன்குணர்ந்தவராதலால் திலகர்பிரான தனக்குத் தெரிந்தவை யெல்லாப் தன்னிடத்துச் சீடராக விருக்கும் வாலிபருக்குத்தெள்ளிய நடையில் நுட்பமாய்ப் புகட்டிவந்தார். ஆகா! திலகர் பெருமானின் திருவடித் தாமரையை வணங்கியவர்வாயினின்றும்வரும்அமுதமொழிகள் யாவும் கேட்டவர்களின்பாக்கியமன்றோ பாக்கியம்! திலகர்தொண்டராய் விளங்குபவரின் பெருமையன்றோ பெருமை!

IV திலகரின் தியாகம்.

நூதனவாங்கிலப் பள்ளியுண்டானசின்னாளில் திலகமாமுனியும் அவரைச் சார்ந்தோரும் கேசரி மாரட்டா வென்ற இருவாராந்தப் பத்திரிகைகளை ஏற்படுத்தினர்கள். கேசரி மஹாராஷ்டிர மொழியில் பதிப்பிக்கப்பட்டுப் பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் வெளி வருவது மாரட்டா. ஆங்கிலத்தி லெழுதப்பட்டு ஒவ்வொரு ஞாயறன்றும் பிரசுரமாவது. இது காலை விஷ்ணு சாஸ்திரியார், ஆரிய பூஷண் சித்திர சாலை யெனும் அச்சுக் கூடங்களை ஸ்தாபித்தார். ஆரிய பூஷண் அச்சுக் கூடத்தில் கேசரியும் மாரட்டாவும் பதிப்பிக்கப் பட்டு வந்தன. சித்திர சாலையிற் சிற்பவேலை சித்திர வேலை யந்திர வேலை முதலிய கைத்தொழில்கள் நடைபெற்று வந்தன. கேசரிக்கு அகர்க்கரும் மாரட்டாவிற்குத் திலகரும பத்திராதிபராய் விளங்கினர். இவ்விரு பத்திரிகைகளும் சுய நலமின்மையையும் தேசாபிமானத்தையும் அஞ்சாத் தன்மையையும் பொது நலத்தையும் தைரியமாய்ப் போதித்து வந்தமையாலும் அவ்வப்போது அரசாங்கத் தாரிடம் குடிகளுக்கிருக்கும் குறைகளையெடுத்துக் காட்டி வந்தமையாலும் நாளுக்கு நாள் சந்தாதார்கள் ஏராளமாய் அதிகரித்து இவைகளுக் கொப்பான பத்திரிகைகள் இந்தியாவிலில்லை யென்று யாவரும் மெச்சும்படித் தலை சிறந்து விள்ங்கின. தூரதேசத்திலுள்ளோர் முக்கியமான விஷயங்களில் இப் பத்திரிகைகளின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்த வண்ணமாயிருப்பது வழக்கம். பத்திராதிபர் இருவராயினும் பத்திரிகைகளைப் படிக்குமளவில் ஒருவராலெழுதப் பட்டவை யெனத் தோன்றும்படி அவ்வளவு ஒற்றுமையோடும் உறுதியோடும் திலகரும் அகர்க்கரும் உழைத்து வந்தார்கள்.

இவ்விதம் இரு பத்திரிகைகளுஞ் செழித்து வருகையில் ஒரு நாள் கருணைக் கடலான திலகர் பிரானும் அகர்க்கரும் கோலாப்பூர் மஹாராஜா சிவாஜி ராவிடம் அதிகார வர்க்கத்தவர் நடந்து கொண்ட முறையைக் கேசரியிலும் மாரட்டாவிலும் பலமாகக் கண்டித்தார்கள். இவர்களெழுதியதன் பயனுகக் குடிகள் யாவரும் சுதேச

(3 ம் பக்கம் பார்க்க)

திருத்தன்னை நீப்பினுந்தெப்வஞ் செயினு
மொருத்தமனத்தோடு யர்வுள்ளினல்லா
லருத்தஞ்செறிக்கு மறிவிலார்பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லா மேல்.

(நாலடியார்)

"Be just and fear not,
Let all the ends thou aimest at
Be thy Country's, thy God's & Truth's'

ரௌத்திரி௵ ஆனி௴ ௰-ம்௳

23rd JUNE 1920.

கனம் ராவ்பகதூர் வி. கே. இராமானுஜாசாரியரின் நியமனம்.

கும்பகோணம் வாசியும் சிறந்த தேசபக்தருமான கனம் வி. கே. இராமானுஜாசாரியார் தஞ்சை ஜில்லா போர்டு பிரிஸிடெண்டாகச் சில தினங்களுக்கு முன் நியமிக்கப்பட்டாலும், அவர் இம்மாதம் 16ந் தேதி தமது புதிய உத்தியோக பதவியை ஏற்றுக் கொண்டனரென்று அறிகிறோம். கனம் ஆச்சாரியரை நமது மாகாணவாசிகள், முக்கியமாக நமது ஜில்லா வாசிகள் நன்கு அறிவார்களென்று நம்புகிறோம். சென்னை மாகாணத்தில் சுய ஆட்சி இயக்கம் எழுப்பப்பட்டபோது, அவர் பலகாலம் தூங்கி வந்த இம் மாகாணவாசிகளைத் தட்டி எழுப்பி அவர்களுக்குச் சுதந்தர தாகத்தை யூட்டியவர்களுள் முக்கியமான வரென்பதை யாவரும் ஒப்புக் கொள்வாரென் பதில் சந்தேகமில்லை. இத் தகையவரான கனம் இராமானுஜாசாரியார் இருமுறை தஞ்சை திரிசிராப்பள்ளி ஜில்லாக்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகச் சென்னை மாகாண சட்ட சபையில அங்கம் வகித்துப் பல நல்லவேலைகளைச் செய்துவருகிறார், ஜனங்களுடைய க்ஷேமம் தம்முடையதென்று கருதி பொது ஜன நலத்திற்கு உழைத்து வரும் கனம் இராமானுஜாசாரியார் நமது ஜில்லா போர்டு பிரிஸிடெண்டாக நியமிக்கப்பட்டது பற்றி நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். இச் சமயத்தில் அவரது கவனத்திற்குச் சில முக்கிய குறைகளை நாம் தெரிவியாமலிருக்க முடியவில்லை. உதாரணமாக முற்காலத்தில் தரும சிந்தையுள்ள இராஜாக்களினால் ஏற்படுத்தப்பட்ட சத்திரங்கள் பல விருக்கின்றன. இவைகளின் நிர்வாகம் திருப்திகரமாயில்லை யென்பதை நாம் வருத்தத்துடன் அறிவிக்கிறோம். சத்திர நிர்வாகிகளின்கையில் ஏராளமாகப் பணமிருந்தும், அப்பணம் தரும வழிகளில் அதிகமாகச் செலவழிக்கப்படாமல் இதர துறைகளில் ஏற்படுத்தப்பட்ட தருமத்திற்கு விரோதமாக செலவழிக்கப்படுகிறது. தொண்டி குருடர்களுக்கு திக்கற்ற பரம ஏழைகளுக்கும் உணப்பைகள் சொரிக்கப்படுகின்றன. இவ்வுணப்பைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டுவது அவசியம். எவ்வளவோ பரம ஏழைகள் சத்திர நிர்வாகிகளை அண்டியும் அவர்கள் நிராகரிக்கப்படுகிறார்கள். இதை ஸ்ரீமான் ஆச்சாரியார் முக்கியமாக கவனிக்க விரும்புகிறோம். பிறகு ரோடுகளின் நிலையைப்பற்றி நாமொன்றும் சொல்லவேண்டுவதில்லை. கண்டியூருக்கும் திருக்காட்டுப்பள்ளிக்கு மிடையேயுள்ள ரஸ்தாவை கனம் பிரஸிடெண்ட் கண்ணுற விரும்புகிறோம். இன்னும் பல ரஸ்தாக்கள் சீர்கேடான நிலையிலிருக்கின்றன. கொழுத்த சம்பளம் பெறும் ஜில்லா போர்டு இன்ஜினீர் என்ன செய்கின்றனரோ? தெரியவில்லை. பின்னர் ரத்த காட்டிலிருக்கும் ஸகிண்ட்டரிஸ்கூலில் பல வருஷங்களாக மேல் வகுப்புகள் ஏற்படுத்தப்படாமலிருப்பதையும், ஜில்லா போர்டு ரெயில்வே நிர்வாகம் இன்னும் பொது ஜன சௌகரியத்திற்கு உபயோகமாயிருக்கவேண்டுமென்பதையும் கனம் ஜில்லா போர்டு பிரஸிடெண்ட் கவனிக்கவேண்டும். முக்கியமாக ரெயில்வண்டிகள் புறப்படும் நேரம் ஸ்டேஷன்களில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் கஷ்டங்கள் முதலியவைகள் கவனிக்கப்பட்டால்நலமாயிருக்கும் பொதுவாக இன்னும் பல குறைகளிருக்கின்றன. சமயம் வந்த காலத்தில் அவைகளை நாம் பட்சபாதமின்றி விவகரிப்போம். நாம் கடைசியாகக் கோருவது ஒன்றுண்டு.

ஜில்லா முழுமையும் நேரில் சென்று சுற்றிப்பார்த்து, எங்கெந்த விஷயங்கள் கவனிக்கப்படவேண்டுமோ அவைகளைக் கவனித்துப் பட்சபாதமின்றி ஜில்லா போர்டு நிர்வாகத்தைச் செலுத்துவரென்று நாம் திடமாய் நம்புகிறோம்.

குறிப்புகளும் அபிப்பிராயங்களும்,

தஞ்சை முனிசிபல் நிர்வாகம்.

இம் மாகாண ஜில்லா முனிஸிபாலிடிகளில் தஞ்சாவூர் நகர முனிஸிபாலிடி முக்கியமானதாகும். இந்த முனிஸிபாலிடியின் நிர்வாகம் சில அம்சங்களில சீர்திருத்தப்படவேண்டுமென்று நாம் கருதினாலும், தற் சமயம் இரண்டொரு குறைகளை நமது நகர முனிஸிபல் சேர்மெனின் கவனித்திற்கும், அவ்வந்த வார்டு கவுன்ஸிலர்களின் பார்வைக்கும் அறிவிக்கிறோம். பிரதி தினம் மலமூத்திர வண்டிகளும் சாக்கடை நீர் வண்டிகளும் தெருக்களில போகும் போது அவைகளிலுள்ள நீர் தெருக்களில சிந்தப்பட்டு அதனால் ஜனங்கள் ஆயாசம் செய்யப்படுகின்றனர். இதனிலைமை கவனிக்கப்படாமலிருக்குமானால் மல மூத்திராதிகளினால் கொத்து வியாதிகளுண்டாகுமென்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டுவதில்லை. முனிஸிபாலிடியின் நிர்வாகஸ்தர்களின் முக்கிய கடமை நகர சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டுவதவசியமகலால் அப்பகுறை நிவிருத்திக்கப்படுமென்று எதிர் பார்க்கிறோம்.

மறு ஸெட்டில் மெண்ட்.

மனிதர்களை உயிரோடு வதை செய்பவைகளில் மறுஸெட்டில்மெண்ட் ஒன்றென்று தஞ்சை திரிசிராபள்ளி ஜில்லாக்களில் ஏழை மிராசுதார்களால் சொல்லக் கேட்டிருக்கிறோம். இவர்கள் சொலவது உண்மையாவென்று பார்க்குமளவில் அஃதுண்மையென்று யாவருக்கும நன்குபுலனாகும். மிராசுதாரர்கள் தங்கள் விளை பொருள்களை விலைக்குவிற்று அதிக லாபம் சம்பாதிக்கிறார்களென்ற எண்ணத்தின்பேரில் கவர்ன்மெண்டார் நிலத்தீர்வையை உயர்த்தவேண்டி, மேற்கண்ட ஜில்லாக்களில் மறுஸெட்டில்மென்ட் செய்யும்படி உத்தரவிட்டிருக்கின்றனர். தஞ்சை ஜில்லாவில் மறுஸெட்டில்மென்ட் வேலைகள் அநேகமாக முடிந்துவிட்டனவென்றும், திருசிராப்பள்ளி ஜில்லாவில் வேலைகள் மும்முரமாக செய்யப்பட்டு வருகின்றனவென்றும் அறிகிறோம். இந்த ஜில்லாக்களில் ஸெட்டில்மென்ட் வேலைகள் முடிவான பிறகு கவர்ன்மெண்டார், பொதுஜன அபிப்பிராயத்தை வழக்கம்போல் அலட்சியம் செய்து ஏற்கனவே தாங்க முடியாமல் நில வரியைத் தாங்கி வரும் ஏழை மிராதார்சுகள் அதிக வரியினால வருத்துவார்கள் இதற்கு மிராசுதார்களென்ன செய்யவேண்டும்? கண்ணம்மாடி அணைக்கட்டு விஷயத்திலும் இன்னும் பல விஷயங்களிலும் அசாத்தையாயிருந்துவருவதுபோல நம் ஜில்லா மிராதார்கள் இவ் விஷயத்திலும் அவ்வாறிருப்பது கூடாதென்று நாம அறிவுறுத்துகிறோம். சில தினங்களுக்கு முன்பு தஞ்சை திரிசிராப்பள்ளி ஜில்லா மிராசுதார்கள் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கத் தங்களுக்குக்கென ஒரு மகா நாடு கூடப்படவேண்டுமென்று யோசனை செய்தார்கள். இப்போது இவர்களுடைய யோசனை என்னவாயிற்றோ? நாமறியோம்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

நாடுகளில் வசிக்கும் ஆங்கிலரின் கொடுஞ் செயல்களைக் கண்டு வெறுப்புற்றனர். "பாவ்" என்னும் ஆங்கில வஞ்சாரியொருவன் அவ்வமயம் கோலாப்பூர் கார்வாரியாய் வேலை பார்த்து வந்தான். அவன் திலகரையும் ஆகர்க்கரையும் [illegible] மான கடக் குற்றத்திற் குள்ளாக்கி நீதிமன்றத்தில விசாரணை கொடாமலே முன்னிட்டு அவனிலக்கோரனுகிய [illegible] இவ்விருவருக்கும் நாலுமாதக் கடுங்காவல் விதித்தார். வழக்கு முடியுமுன் விஷ்ணு சாஸ்திரியார் வயதின் முதுமையால் சிறைக் காவலிலடைந்து உயிர் துறந்தார். (இன்னும் வரும்)

இவர்களென்ன செய்யவேண்டும்?

தஞ்சை திரிசிராப்பள்ளி ஜில்லா மிராசுதார் பிரமுகர்கள் இனிமேலும் காலம் தாழ்த்தாது தாலுக்காவுக்கு இரண்டு பிரதிநிதிகளாகக் கூட்டி ஒரு கமிட்டியாக நியமித்துக்கொள்ளவேண்டும். இக்கமிட்டியின் அங்கத்தினர்கள் ஜனங்களின் நிலைமையையும் அவர்கள் செலுத்தும் நிலவரி விகிதத்தையும் இன்னும் அதிகவரி விதிக்கப்பட்டால் ஏழை மிராசுதார்கள் தாங்க மாட்டார்களென்பதையும் விசதமாகக் கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டவேண்டும். இத்துடன், மிராசுதார்கள் தங்கள் தானியங்களை உயர்ந்தவிலைக்கு விற்று அதிக லாபம் சம்பாதிக்கிறார்களென்றும் விளக்கிக் காட்டவேண்டும். மிராசுதார்களின் விளை பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றனவென்று கவர்ன்மெண்டார் கருதுகின்றனரேயன்றி அவர்களது வாழ்க்கைக்கு வேண்டிய மற்றப் பொருள்கள் ஒன்றுக்கு மூன்றாகவும் சில அம்சங்களில் ஐந்தாகவும் விற்கப்படுவதை ஏனோ அறியவில்லை? மிராசுதார்கள் லாபம் சம்பாதிக்கவில்லையென்பதைக் கவர்ன்மெண்டாருக்கு நன்கு அறிவிக்கவேண்டும். மறு ஸெட்டில்மெண்ட் செய்து, நிலவரியை அதிகார வர்க்கத்தினர்களின் இஷ்டப்படி கவர்ன்மெண்டார் உயர்த்துவார்களானால் எங்கணும் ஏற்பட்டிருக்கும் அமைதியின்மையையும் அதிருப்தியையும் அதிகப்படுத்தினார்களென்ற பழிக்கு அவர் ஆளாவார்களென்பதில் சந்தேகமில்லை.

கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளம்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஆட்சிமுறையில் நாளுக்கு நாள் இந்தியர்களுக்கு அதிருப்தியுண்டாகி வருகிறதென்பதை அதிகாரிகள் ஒரு கால் கவனியாமலிருந்தபோதிலும் நாம் அக்குறையைக் கவர்ன்மெண்டிற்கு எடுத்துக் காட்டுவது அவசியமென்று நினைக்கிறோம். இவ்வாறு செய்தலை நம்முடைய கடமையேயன்றி வேறொன்றுமில்லை. ஆயிரக்கணக்கான கீழ்தர உத்தியோகஸ்தர்களும் கிராம உத்தியோகஸ்தர்களும்தான் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஆட்சிக்கு அஸ்திவாரம் போன்றிருக்கிறார்களென்று சொல்வது மிகையாகாது. இவர்களுடைய சம்பளம் காலத்திற்கேற்றபடி உயர்த்தப்படுமென்று எல்லோரும் வெகுஆவலாய் எதிர்பார்த்திருக்கக் கவர்ன்மெண்டார், நொந்தபுண்ணில் ஊசியை [illegible] பல் கீழ்கர உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தையும் கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தையும் ஆவ[illegible] வர்க்க[illegible] கொஞ்சமே உயர்த்தி[illegible]கள். இது இவர்களுடைய [illegible] பெரி[illegible]த்தையும் அதிருப்தியையும் [illegible]க்கின்றது. கீழ்த்தர உத்தியோகஸ்தர்களின் சம்பள உயர்வு ஒரு [illegible] கிராமக் கர்ணங்களின் சம்பள[illegible] [illegible]ப்படுத்தியிருப்ப[illegible] [illegible] இரண்டு [illegible] மு[illegible]ர்களிருக்கும் கிராமத்தில் அவர்களில் தலைமை வகிப்பவருக்கு அதிக சம்பளம் கொடுப்பதைப்பற்றிக் கவர்ன்மெண்டார் ஆலோசனைசெய்து ரிபோர்ட் செய்ய மிஸ்டர் நாப்புக்கு உத்திரவிட்டிருக்கின்றனராம்!

வழிகளொன்றுமில்லை.

பிறகு கிராம முன்சீப்களுக்குச் சம்பளம் உயர்த்தப்படாததற்குச் சில போலி காரணங்கள் கூறப்படுகின்றன. கிராம முன்சீப் பதவியை ஒரு கௌரவ பதவியாக நினைக்கக் கிராம முனிசீப்களும் இடங்கொடுக்கவில்லை. இதாப்பொதுஜனங்களும் அவ்வாறு கருதவில்லையென்பதைக் கருதிகவர்ன்மெண்டார் வேறுமுறையில் முனிசீப்களின் நியமன முறையைச் சட்டரூபமாக அமைக்கப் போகிறார்களென்று அறிவிக்கப்படுகிறது. கீழ்தர ரெவினியு அதிகாரிகள் கிராம முனிசீப்களை மரியாதையாக நடத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் அனுதாபம் காட்டுகின்றனர். முடிவாகக்கிராமாதிகாரிகளின் கண்ணைத் துடைப்பதற்கு எந்தெந்த வழிகளுண்டோ அவைகளைக் கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்கத் தொடங்கியிருக்கின்றனர். கிராம முனிஸீப்களுக்குப்படிக்கு கர்ணங்களுக்குச் சம்பளமும்படியும் வெட்டியான் தலையாரிகளுக்குச் சம்பளமும் படியும் முதலியவைகளெல்லாம் சேர்ந்து கவர்ன்மெண்டிற்கு வருடத்தில் ஏற்படுத்தச் செலவு சுமார் 42 லட்சமாகிறது. இந்தொகை மிக அதிகமென்று கவர்ன்மெண்டார் நினைக்கின்றனர்போலும்! காலத்திற்கேற்றபடி அதிக சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டால், கவர்ன்மெண்டார் "பணம் எங்கே" என்று கேள்வி கேட்டு "அதற்கு வழிசொல்லுங்களென்று" வினவுகின்றனர். உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு, அதாவது ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டபோது கவர்ன்மெண்டார் யாரைக்கேட்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தினர், அதற்குப் பணம் எங்கிருந்து வந்தது? என்ற கேள்விகளைக்கேட்டார், இதற்குப் பதில் கவர்ன்மெண்டார் என்ன சொல்லுவார்களோ? கிராம உத்தியோகஸ்தர்கள் இடைவிடாமல் நியாயக் கிளர்ச்சிசெய்து தங்களுடைய நிலைமையைச் சீர்படுத்திக் கொள்வதைத்தவிர அவர்களுக்கு வேறு வழிகளொன்றுமில்லை.

நமது பத்திரிகையைப் பற்றி அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்

ஜனங்களுக்கு அவர்களுடைய கடமைகளையும் சுதந்தரங்களையும் நன்கு போதிக்கவேண்டிய அவசியம் அதிகமாக இருந்துவரும் இக்காலத்தில் புதிய புதிதாக பத்திரிகைகள் கிளம்பி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். தஞ்சையில் மிஸ்டர் இ. சூரியநாராயணய்யரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஸமரஸபோதினி என்னும் இப்பெயர் கொண்ட வாரந்தத் தமிழ்ப் பத்திரிகையின் முதலிதழ் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. எல்லாக் கட்சியினரையும் சமரஸப்படுத்தி ஒன்றாக வேலைசெய்யும்படி செய்வதே இப்பத்திரிகையின் நோக்கமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகவும் உத்தமமான லட்சியம் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. அது ஈடேற வேண்டுமென்று நாம் கடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

சென்னை இந்துப் பத்திரிகை பின்வருமாறு எழுதுகின்றது:—

தஞ்சை நகரில் "ஸமரஸபோதினி என்னும் பெயருடன் வெளிவந்திருக்கும் தமிழ் பத்திரிகைக்கு நாம் மனபூர்வமான நல்வரவு கூறுகின்றோம். நம் நாட்டிலுள்ள கட்சியார்களுக்குள் ஸமரஸத்தை ஏற்படுத்தி ஒன்றாக வேலை செய்யும்படி செய்து, இந்தியா சுயாட்சிப் பெற வழிதேடுவது இப்பத்திரிகையின் நோக்கமென அறிகிறோம். எவ்விதம் வோட் சுதந்தரம் பெற்றவர்களை சரியான வழியில் அதை பிரயோகிக்க வேண்டுமென்பதை எடுத்துச் சொல்வதும் ஜனங்களுக்குராஜிய, விவசாயத் தொழில் முதலிய விஷயங்களைப் பற்றி ஆங்கிலப் பயிற்சியில்லாத நமது சகோதரர்களின் தேர்ச்சியை முன்னிட்டு தெளிவாய் எடுத்துப் புகட்டுவதும் இப்பத்திரிகையின் முக்கிய நோக்கங்களிலொன்றாகுமென தெரியவருகின்றது. இப்பத்திரிகையின் முதல் பிரதியில் திலகர் பெருமானின் திவ்ய சரித்திரமும் சுதேசிய விரதமும் தொழிலாளர் இயக்கமும் இன்னும் அநேக விஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

சென்னை "தேசபக்தன்" என்னும் தமிழ் பத்திரிகை பின்வருமாறு எழுதுகின்றது:—

"ஸமரஸபோதினி என்னும் பெயர் கொண்டு வாரந்தோறும் தஞ்சாவூரில் வெளியாகும் பத்திரிகையின் முதலிதழ் எமது பார்வைக்குக் கிடைத்திருக்கிறது. இப்பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் இ. சூரியநாராயண அய்யர் பி. ஏ. பி. எல். அவர்களைத் தென்னாடு நன்கு அறியும். இப்பத்திரிகை தன்பெயருக்கேற்ப எவ்வித கட்சிபேதமின்றி நடைபெறும் என்று தெரிகிறது. தமிழ் நாட்டில் பத்திரிகை பல வேண்டப்படும் இக்காலத்தில் இத்தகைய பத்திரிகைகள் தோன்றுவது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. ஸமரஸபோதினி என்னும் இப்பத்திரிகை பன்னிரண்டு பக்கங் கொண்டதாய் நல்ல விஷயங்களைக் கொண்டிருக்கிறது. இப்பத்திரிகைக்கு நல்வரவு கூறிப்புல பெரியோர் செய்திகள் அனுப்பியிருக்கின்றனர். இப்பத்திரிகைக்கு நாமும் நல்வரவு கூறுகின்றோம்."

ஸமாசாரத் திரட்டு.

இம்மாதம் 21ந் தேதி திருநெல்வேலியில் நடந்த 26-வது சென்னை மாகாண மகாநாட்டிற்கும் பிரதிநிதிகளாக நமது நகரத்திலிருந்து சுமார் முப்பது கனவான்கள் புறப்பட்டுப் போனார்கள். அவர்களுள் ஸ்ரீமான்கள் திவான் வி. பி. மாதவராவ் வி. முல்ஹாரிராவ், டி. ஏ. இராமச் சந்திர செட்டியார் சூரிய நாராயண அய்யர். கே. நடராஜன் கிருஷ்ணசாமி நாயக், வெங்கடராம அய்யர், பால சுப்பிரமணிய அய்யர் முதலியவர்கள் முக்கியமானவர்களாகும். பாரத பக்த ஜன சபை மெம்பர்களில் சிலரும் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கிறார்கள்.

இம்மாதம் 18ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் டி. வி. கோபாலசாமி முதலியார் தேசியக்கட்சியாரின் கொள்கைகளும், வரும் சட்ட சபை எலக்ஷனும் விஷயமாய் மணிக்கூண்டு மைதானத்தில் ஓர் உபந்நியாசம் புரிந்தார். சுதேசமித்திரன் ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமான் ஸி ஆர் ஸ்ரீநிவாச அய்யங்கார் அக்கிராசனம் வகித்தார்.

பஞ்சாப் குழப்ப விஷயமாக வெளியிடப்பட்டுள்ள ஹண்டர் கமிட்டி ரிப்போர்டையும் கிலாபத் விஷயத்தையும் பற்றி யோசித்து முடிவு செய்ய ஒரு விசேஷ காங்கிரஸ் மகாநாடு சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பர்ஹாம்பூரில் நடைபெறும்

திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குறிச்சியின் சுய ஆட்சி சங்க வருஷக் கூட்டம் இம்மாதம் 25ந் தேதி நடைபெறும் அவ்வமயம் ஸ்ரீமான் எஸ் கஸ்தூரி சங்க அய்யங்கார் அக்கிராசனம் வகிப்பார்.

“சுதந்தர வாதி” யென்று ஒருவாரப் பத்திரிகை தென்னாட்டில் சமீபத்தில் வெளிவருமென்று தெரிகிறது.

வட மேற்கு ரெயில்வே தொழிலாளர்களில் சுமார் இருபதினாயிரம் பேர் மீண்டும் 17ந் தேதி வேலை நிறுத்தம் செய்திருப்பதாக லாகூர் செய்தி கூறுகிறது. இது சமீபத்தில் முடிவடையுமென்று நம்பப் படுகிறது.

இந்திய இராணுவத்தில் உத்தியோகம் செய்து விலகிக் கொண்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் சம்பளத்தை உயர்த்த இந்தியா மந்திரி உத்தரவு கொடுத்திருக்கிறார். பதினைந்து வருஷம் வேலை செய்து விலகிக் கொண்டவருக்கு பிரதி வருஷம் 150 பவுனும் அதற்கு மேல் வேலை செய்த வருஷங்களுக்கு வருஷம் 15 பவுனு உபகாரச் சம்பளம் கொடுக்கப் படும்.

இந்தியன் மெடிகல் ஸர்வீஸிலிருந்து விலகியிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் உபகாரச் சம்பளம் உயர்த்தப் பட்டிருக்கிறது.

சென்னை நகரில் தொழிலாளர்களின் கிளர்ச்சி ஓய வில்லை. இந்நிலைமையில் முதலாளிகள் இவர்களுடைய இயக்கத்தை அடியோடு ஒழிக்க முயற்சிகள் செய்வதாகவும் தொழிலாளர்கள் விழித்துக் கொண்டு விட்டதாகவும் சென்னையினின்றும் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகள் கூறுகின்றன.

நகர நிர்மாண மசோதா சென்னைச் சட்ட சபையில் கொண்டு வரப்பட்டு ஆலோசனைக் கமிட்டிக்கு விடப்பட்டிருந்தது. இப்போது அதைப்பற்றியுள்ள ஆலோசனைக் கமிட்டியின் ரிபோர்டு இரண்டு மறுப்புரைகளுடன் சென்ற வார கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

மதுரை ஜில்லாவைச் சேர்ந்த கன்னுவாடி ஜமீன் சம்பந்தமாக மிஸ்டர் என் ஆர் ஐயர் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்திருந்தார். அவ்வழக்கு மிஸ்டர் ஐயருக்குச் சாதகமாக முடிந்து விட்டதென்றும் இப்போது அந்த ஜமீன் மிஸ்டர் ஐயருக்குச் சொந்தமென்றும் ஒரு நிருபர் நமக்கு அறிவிக்கிறார்

திருச்சி ஸ்ரீமான் எஸ் ராமநாத செட்டியார் அவர்களுக்கு இவ்வருஷம் ராவ்சாகிப்பட்டம் அளிக்கப்பட்டிருப்பதாக ஒரு நிருபர் அறிவிக்கின்றார். இவர் மிக தர்மசிந்தனையுள்ளவர். அநேக சத்திரங்களை கட்டி வைத்து ஏழைகளுக்கு அன்னமளித்து வருகின்றார். தவிர இவர் அநேக கோவில்களையும் கட்டி வைத்திருக்கின்றார். இத்தகைய தர்ம சிலருக்கு பட்டமளித்ததைப் பற்றி கேட்க நாம் சந்தோஷமடைகின்றோம்.

யுத்தம் நின்றதற்குப் பிறகு அமெரிக்கா எல்லாவிதமான கப்பல்கள் கட்டுவதில் மிகவும் முன்னேற்ற மடைந்து வருகிறதென்றும், இதே வேகத்தில் அமெரிக்கா வியாபாரக் கப்பல்களைக் கட்டி வந்தால் அதனிடம் 19.3ம் வருஷத்தில் உலகத்துத் தேசங்களிலிருக்கும் யுத்தக் கப்பல்களை விட போர்க் கப்பல்கள் அதிகமாயிருக்குமென்றும் டைம்ஸ் ஆப் இந்தியாவின் லண்டன் நிருபர் அறிவிக்கிறார்.

சர்வ தேசத்தின் ஆதரவின் கீழ் ஸ்விட்ஸர்லாண்டின் பிரதான நகரத்தில் சர்வ தேச கப்பல் கட்டும் மகாநாடு கூடப்படுமென்றும், அதற்கு மொத்தம் இருபது பிரதிநிதிகள் எல்லா தேசங்களினின்று வருவார்களென்றும், அவர்களில் இந்தியப் பிரதிநிதிகளும் அடங்கி இருப்பார்களென்றும் ஒரு லண்டன் செய்தி கூறுகிறது. இந்தியர்கள் தாங்களாகவே ராணுவத்தில் சேர்ந்து கொள்ளுமாறும் அவை ஒரு காப்புப் படையாக வைத்துக்கொள்ளவும் வேண்டி இந்தியா மந்திரி இந்தியா கவர்ன்மெண்டாரோடு ஆலோசனைசெய்து வருவதாகத்தெரிகிறது.

திருச்சியிலிருக்கும் தேசீயக் கட்சியினர் ஒருபகிரங்க விளம்பரம் செய்து அதில் எல்லாத் தேசியக்கட்சியினர்களும் அனடோலியாவுக்குச் சென்று சமாதான உடன்படிக்கை நிபந்தனைகளை அமுலுக்கு கொண்டுவராமல் பலாத்காரமாக எதிர்க்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்களென்று ஒரு செய்தி கூறுகிறது.

லார்ட் செம்ஸ் போர்டை மீண்டு திரும்ப அழைத்துக் கொள்ளப்படவேண்டுமென்றும், டயரும், ஓட்வியரும் அரெஸ்ட் செய்யப்பட்டு விசாரிக்கப்படவேண்டுமென்றும் ஐக்கிய மாகாண கிராம விவசாயசங்கத்தார்கள் தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தைச் சேர்ந்த பிராட்போர்ட்டென்னும் முனிசிபாலிட்டியில் நகர ஜனங்கள் தேய்த்துக் குளிப்பதற்கு நீர்க்குளாய்கள் அமைத்திருக்கிறார்கள். ஸ்நானம் சோப்புகளும் கொடுக்கப்படுகின்றனவாம். ஆனால், ஸ்நானத்திற்கு இரண்டணா வாங்கப்படுகிறதாம்.

மாரிகாலத்தில் இந்தியாவுக்கு வரும் நமது இளவரசர் சென்னைக்கு விஜயம் செய்யும்பொழுது திருஷ்டிதோஷத்தை நிவர்த்தி செய்ய அவருக்கு ஹாரத்தி யெடுக்க வேண்டுமென்று சிலரும், கூடாதென்று சிலரும் கூறுகின்றனர். இந்த வைபவத்திற்கு இளவரசரின் வரவேற்ப்பு கமிட்டியார் இடங்கொடுப்பாராவென்று “கிறிஸ்டியன் பேர்ட்டியட்” பத்திரிகை ஒரு கேள்விக் கேட்கிறது.

ஆரோக்கிய பரிபாலனம்

ஹிந்துக்களுள் ஒருவரை ஆசிர்வதிக்கவேணுமானால் விசேஷமாகக் கோரும் ஆசிர்வாதங்கள் 5 ஆகும். அதாவது ஆயுஸ், ஆரோக்கியம், ஐசுவரியம், திடசரீரம் சத்சந்தானம், இந்தமிகவும்விசேஷமான 5 விஷயங்களையும் கிளிப்பிள்ளை போல், சொல்லுவாரும், கவனமில்லாமல் கேழ்ப்பாரும் அனேகர். தேவாலயத்தில் அர்ச்சனை செய்து பிரசாதம் பெறும் போழ்தெல்லாம் ஈசுவர அனுக்கிரகமாக இந்த முக்கியமான 5 வித ஆசீர்வாதங்களையும்பெறுகிறோம். வீடுகளில் பூஜைசெய்து தீர்த்தம் வாங்கும்பொழுதும் இந்த 5 கோரிக்கைகளையும்வேண்டுகிறோம்,

ஆனால் நமது அனுஷ்டானங்களைமுறையே ஆரோக்கியம், திடசரீரம் சத்சந்தானம், ஆயுள் இந்த விஷயங்களைப்பற்றி நாம் நன்கு கவனிக்கிறதில்லை. ஆசீர்வாதக்கிரமத்தில் ஆயுள் என்பது முதல், ஏனென்றால் ஈசுவரன் ஆயுள் அளித்தால் மாத்திரமே நாம் முயற்ச்சி செய்யலாம். மனுஷ்ய அனுஷ்டானக் கிரமத்தில் ஆரோக்கியம் முதலாக வரும். ஏனென்றால் நம் ஆசாரங்களால் நம் சரீரத்திற்கு ரோகத்தையும் வருவிக்கலாம், ரோகமில்லாமலும் பாதுகாக்கலாம். அதில் நம் கவனமெப்படியோ அப்படித்தான் நமக்கு ஈசுவரன் கொடுத்த ஆயுளும் நாசமாகும் அல்லது விருத்தியாகும். ஆரோக்கியம் மாத்திரம் போதாது. திடகாத்திரத்திற்கு வேண்டிய முயற்சியும் செய்ய வேண்டும். பிறகுதான் சத்சந்தானம் என்னும் மக்கள் பேறு உண்மையில் உண்டாகும்.

நம்மவ சந்தானம் விசேஷம சத்சந்தானம் அபூர்வம். அது என்ன காரணத்தினால் அப்படி விளைந்தது? ஆராய்ந்து

பார்க்கும் போது அதுவும் நம் அனுஷ்டானபேதங்களால்தான் என்று விளங்கும். சந்தானம் சத்வகுணமாக வேணுமானால் குழந்தை பெற்றால் மாத்திரம் போதாது. குழந்தை பெறுவதற்கு முன்னும் பிரஸவகாலத்திலும் குழந்தை வளர்ப்பதிலும் விசேஷ கவனம் செலுத்தி நல்ல அனுஷ்டானங்களை நாம் தவறாது அனுசரித்தால் மாத்திரமே சத்சந்தானமாக விளையும்.

இவ்விஷயங்களில் நமது தேசத்தில் சொந்தமேனும் சரியான அனுஷ்டானங்கள் கிடையாது. அது மாத்திரமல்ல. விசேஷ ஆபாஸ விதிகளை அனுசரிப்பதும் சகஜமாகயிருக்கிறது. ஆனால் நம் தேசத்தில் பிரஜைகள் மிகவும் விருத்தியாகிறதே? பூர்வத்தில் நம் முன்னோர் சரியான விதிகளை அனுஷ்டிக்க வில்லையா? இம்மாதிரி கேள்விகள் அவசியம் கேட்கவேண்டும். முதல் கேள்விக்கு பதில் மற்றொரு கேள்வி நன்றாய் உழுது நீர்பாய்ச்சி உரம்போடாத வயலும் விளையவில்லையா? இரண்டாம் கேள்விக்கும் பதில் கேள்விகள் உமக்கும் நம்முன்னோர் அனுசரித்த விதிகளும் அவர் காலங்களில் வழங்கி வந்த தேசாசாரமும் குலாசாரங்களும் குடும்பாசாரங்களும் உமக்குத் தெரியுமா? அவைகளுக்கும் இப்பொழுது நம் தேசஸ்திதிக்கும் வித்தியாஸமுண்டா? அந்த வித்தியாஸங்களுக்கு அனுசரித்து வழக்கங்களும் விருத்தியாயிருக்கின்றனவா? இக்கால விசேஷத்திற்குத் தகுந்தபடி ஆசாரங்கள் ஏற்படுத்தவேண்டிய அவசியம் உமக்குத் தெரிகிறதாயில்லையா?

இது விஷயங்களை ஆண் பெண் அடங்கலும் கோபம், தாபம், கர்வம் அவஸரமன்றியில் தம் தம் மனதுக்குள் ஆராய்ந்து நோக்கும் பக்ஷத்தில் என் மனதில் தோன்றியபடி நமக்கு இக்கால விசேஷத்தை அனுசரித்து ஆசாரவிதிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் என்று தோன்றும் என்று நம்புகிறேன், இவ்விதிகள் ஜாதி, மதம் முதலிய பேதங்களுக்குண்டான அறிகை முதலிய துர்க்குணங்களுக்கும் இடம்கொடாது இருக்கவேணும் என்பது எல்லா விவேகிகளுக்கும் நன்கு விளங்கும்.

மேலவிவரித்த ஆரோக்கியம் திடகாத்திரம், சத்சந்தானம் என்ற மூன்று அம்சங்களும் நமக்குண்டானால் ஆயுள் விருத்தியாவதில் சந்தேகமுண்டோ? ஐசுவரியம் தானே நம்மைத்தேடும் என்பதிலும் சந்தேகமுண்டோ?

ஆகையால் எல்லா நற்குணங்களுக்கும் ஆனந்தங்களுக்கும், ஆதாரகாரணமானது ஆரோக்கியம். அதை நாம் கவனித்து நடக்கும் பக்ஷத்தில் மற்ற குணங்கள் கிரமமாக நமக்குக் கைகூடும். இந்த பத்திரிகையை வாசிப்பவர்கள் இவ்விஷயத்தைப் பற்றி நான் எழுதிவரும் விஷயங்களை கவனித்து வாசித்து வரும்படியும் வாசித்தப்பிறகு வீட்டிலும் சிநேகிதர்களோடும் விவரித்துப் பேசும்படிக்கும் சம்மதமான அம்சங்களை அனுஷ்டிக்கும்படிக்கும் அசமாதானமான விஷயங்களைப்பற்றி தயவுசெய்து எனக்கு எழுதும்படிக்கும் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆக்ஷேபம் சொல்லுபவர்களிடத்தில் எனக்குப்பிரியம். ஏனென்றால் அவர்கள் தான் கவனித்து வாசிப்பவர். வாசித்தபிறகு யோசிப்பவர், யோசித்தபிறகு ஆக்ஷேபவிஷயங்களை தொடுப்பவர் தொடுத்த விஷயத்தை விளங்கும்படியான வார்த்தைகளில் எழுத முயல்பவர் அம்மாதிரியான கவனத்தை எல்லோரும் செலுத்தும்படி பிரார்த்திக்கிறேன்.

R. S. சங்கய்யர்
டிஸ்டிரிக்ட் முன்சீப் திருச்சி
திருச்சினாப்பள்ளி ஜில்லா
ஆரோக்கிய பரிபாலன சபை காரியதரிசி.

(All Rights Reserved.)

தென்னிந்தியாவில் எருவைப் படுத்திப் போடும் விதம்.

விவசாய இலாக்கா டிட்டி டைரக்டர் மிஸ்டர் சி பென்சன் எழுதியது:

(அறிவுப்புச் சங்கத்தாரிடமிருந்து-)

விரகு அகப்படாத சில இடங்களிலும் பட்டணங்களுக்குச் சமீபங்களிலும் மாட்டுச் சாணியின் பெரும்பாகத்தை விராட்டியாகத்தட்டி அடுப்பெரிக்கிறார்கள். அதினால் எருவுக்குபயோகப்படக் கூடியதாய் கொஞ்சம் சாம்பல்தான் மிச்சப்படுகிறது. குடியானவன் தானே தன் மாட்டின் சாணியை அடுப்பெரித்தால், சாம்பலைச் சாதாரணமாய் ஒரு வெளியிடங்களில் போட்டுவைக்கிறான். அங்கே அதிலுள்ள நல்ல சத்துக்களெல்லாம் போய் விடுகிறது. மாட்டுச் சாணியை எரித்து விடுகிற வழக்கம் பெரிய நஷ்டத்திற்குக் காரணமென்று யாவருக்குந் தெரியும். மாட்டுச் சாணியை அடுப் பெரிப்பதால், குடியானவனுக்குக் கொஞ்சந்தான் செலவு மிச்சப்படுகிறது. ஆனால் கோயம்புத்தூர், சேலம் முதலிய இடங்களில் செய்யப்படுவது போல, தன் வயல்களைச் சுற்றி வேலிகள் வளர்த்தாலும், அல்லது, தன் வயலில் ஒரு சிறு பாகத்தில், விரகிற்காக மரங்களை வளர்த்தாலும், அவனுக்கு வேண்டிய அளவு விரகு சுலபமாய்க் கிடைக்கும். இவ்வித உபாயங்களால் மாட்டுச் சாணியை விரகு எரிக்கும். சேதமுண்டாக்கும் வழக்கம் போய் விடும். மேலும் பெரிய பட்டணங்களுக்குச் சமீபத்தில், விரகின் விலை அதிகமாய் இருப்பதால், விரகிற்காக மரங்களைப் பயிராக்கல், சாதாரணமாய் அதிக இலாபம் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது.

குடியானவர்கள் சாதாரணமாய் மாட்டுச் சாணியை வெளியில் காற்று அடிக்குமிடத்தில் குவியலாய்ச் சேர்த்து வைப்பது வழக்கம், அவ்விடத்தில் அவைகள் கெட்டியாய் உலர்ந்து போய் மழை பெய்யும்போது கரைந்து போகிறது. பலவிதமாய் அதினால் ஸத்துக் குறைகிறது. கடைசியில் பிரயோஜனமற்ற சத்து இல்லாத ஒரு சிறு குவியல்தான் வயலுக்கு எருவாகக் கொண்டுபோகப் படுகிறது. அந்தச் சாணியோடு கொஞ்சம் வைக்கோலும் தழைகளும் இருக்கும். ஒவ்வொரு வஸ்துவும் தனித்தனியே நிற்கிறது. சாணியில் சத்துக் குறைந்து விடுகிறது. வைக்கோல் தழைகள் கெட்டிப் பட்டு உலர்ந்து போகிறது. இந்தியாவில் மாடுகளுக்குப் படுக்கைப் போடுவதில்லை. ஆகவே ஆயிரத்தில் ஒரு தரங்கூட மாடுகளின் மூத்திரத்தைச் சேர்த்து வைக்க முயற்சி செய்வதில்லை. இது நஷ்டத்தை உண்டாக்குகிறது. ஏனெனில், மேலே சொல்லப்பட்டது போல, எரு கெட்டிப்பட்டு உலர்ந்து விடுகிறது. மேலும் மூத்திரத்தை கவனியாததால் அதிக நஷ்டத்தையும் கெடுதியையும் உண்டாக்கக் கூடியதாயிருக்கிறது. ஏனெனில், நீர்ப் பாகமாக இருக்கிற எருவைச் சேர்த்து வைக்காமல் இருப்பதோடு கூட பூமியிலும் முக்கியமாய் மாடுகளின் காலடிப் பள்ளங்களிலும் அது தேங்கி மண்ணோடு கலந்து நாற்றமெடுத்து வீட்டிலாவது கொட்டிலிலாவது உள்ள காற்றுக் கெட்டுப்போய் அசுத்தமாய் இருக்கிறது. கொட்டில்களில் காலை வேளைகளில் இந்த காற்று வீசுவதை ஒவ்வொருவரும் கவனித்து இருக்கிறார்கள் இது பூமியில் விழுகிற மூத்திரத்திலுள்ள நல்ல சத்துள்ள வஸ்துக்கள் ஆவியாய்ப் போய் விடுவதனால் ஏற்படும் நாற்றமே

குடியானவனுக்கு மாட்டு மூத்திரத்தின் உபயோகம், ஒருவாறாய்த் தெரிந்து இருந்த போதிலும், அதை அவன் முற்றும் உணரவில்லையென்றே நினைக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் மாட்டின் மூத்திரத்தில் சாணியைப் பார்க்கிலும் நிலத்தைச் செழிப்பிக்கும் வஸ்துக்கள் அதிகமாயிருக்கின்றன. ஆகையால் மாட்டின் மூத்திரத்தை உபயோகிக்காமல் வீணாக்குவதினால் பெரு நஷ்டமுண்டாகிறது. இவ்விதமாய் நஷ்டம் உண்டாகாதிருக்க வேண்டுமானால் மாட்டிற்கு வைக்கோற் படுக்கைப் போட்டு வைத்தால் மூத்திரத்தில் அது ஊறி இதைச் சேதப்படுத்தாமல் காக்கும் அல்லது கொஞ்சம் காய்ந்த மண்ணைக் கொட்டிலில் தூவி வைக்கலாம். மண் தூவி வைத்தால் மூத்திரத்தின் பெரும்பாகம் சேதப்படாமல் சேர்க்கலாம். அந்த மண்ணை எருவாக உபயோகப்படுத்தும் வரையில் கொட்டிலிலே வைத்திருக்கலாம் அல்லது அடியில் விவரித்திருக்கும் எருக் குழியில் போடலாம். வயல்களில் ஆடுமாடுகளைக் கட்டியிருந்தால் மூத்திரம் வீண் போகாது.

குடியானவனது நிலைமைக்குத் தக்கபடி, எரு சேர்க்கும் ஒரு மேன்மையான வசதி அடியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி சேர்ப்பதில், சாணியும் மூத்திரமும் கொட்டிலிலிருந்து அடிக்கடி எடுக்கப்படுவதில்லை. எருதேவையாயிருக்கும் பொழுதுதான், பல மாதங்களுக்கொருமுறை எடுக்கப்படும். போடப்படும். படுக்கை மூத்திரத்தை இழுத்துக் கொள்ளுகிறது.

மாட்டுக் கொட்டிலின், கீழ்மட்டம், சுற்றியிருக்கும் பூமிக்கு 2 அல்லது 3 அடி பள்ளமாயிருக்கவேண்டும். அப்பள்ளத்தின், தரையும் பக்கங்களும், களி மண்ணால் பூசப்பட்டிருக்க வேண்டும். தரை மட்டத்தில், ஆரம்பத்தில் சாச்வதமாய் கொஞ்சம் சாம்பலை அடிப்படையாய்த் தெளிக்கவேண்டும்; ஒவ்வொரு நாளும், தரையின் மேல் படுக்கைக்காக, தழை முதலியவைகளை படைப்படையாக போடவேண்டும். இதற்காக, தழைகளையும், கோரை புற்களையும், இன்னும் மற்றமுள்ள, கந்தமூல சரக்குகளையும் குடியானவனும் அவனுடைய மாடுகளும் வேலையில்லாமலிருக்கும் பொழுது சுலபமாய் கிடைக்கக்கூடிய காலத்தில் சேர்த்து பத்திரப்படுத்தி வைத்திருக்கவேண்டும். கழிந்தவைக் கோலையும். நெல் அடித்து, எடுத்தபின் கதிர் முனையைப்போல, பயிரின் தள்ளப்பட்ட பாகங்களையும், படுக்கையாக உபயோகிக்கலாம். ஒரு சோடி மாட்டிற்குக் கொட்டில் 10-அடி நீளம் 6 அடி அகலம் இருக்கலாம். கொட்டிலில் மாடுகளைக் கட்டாமல் விட்டுவைப்பது நல்லது. ஏனென்றால், மாடுகள் எருவின் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாய் மிதித்து, அமுக்கும். எரு நன்றாய் மிதிக்கப்படாவிட்டால், சீக்கிரம் அழுக ஆரம்பித்து, அதிகமாய் நஷ்டப்பட்டு, கெட்ட நாற்றம் வீசி மாடுகளுக்கு வியாதியுண்டாகும். தினசரி காலையில், முன்னிரவு போட்ட சாணியை மட்டமாய்ப் பரப்பி அதின்மேல் படுக்கைக்குப் சில தழை கொஞ்சம் பரப்பவேண்டும். இந்த விதமாய், அந்தக் குழி நிரம்பும்வரையில் எருச்சேர்க்கலாம். இது சுமார் மூன்று மாதம் பிடிக்கும்.

(தொடரும்)

விசேஷ வியாசங்கள்.

நெடாலில் தமிழ்த் தொழிலாளர்களின் பரிதாப நிலை.

வங்காளத்தைச் சேர்ந்த போல்பூர் சாந்தி நிகேதனத்திலிருந்து நம்மவர்களுக்காக அரும்பாடுபடும், மிஸ்டர் ஸி. எப். அன்ட்ரூஸ் மேற்கண்ட விஷயமாக நமது பத்திரிகைக்கு ஆங்கிலத்தில் ஒரு சிறந்த வியாசம் எழுதியனுப்பியிருக்கிறார். அதன் மொழிபெயர்ப்பை நாம் ஈண்டு சந்தோஷத்துடன் வெளியிடுகிறோம் :—

சென்னை மாகாணத்திலிருந்தும் மலேயா பிரதேசங்களுக்கும், இலங்கைக்கும் பிஜித் தீவுக்கும் சென்றிருக்கும் தமிழ்த் தொழிலாளரின் உண்மையான நிலைமையை நன்குணர்வேன். சென்னை ராஜதானியிலேயே அவர்களின் நிலைமையை நேரில் அறிந்திருக்கிறேன். நெடாலில் பெரிய கருப்புத்தோட்டங்களில் வேலை செய்யும் நமது தொழிலாளர்களின் நிலைமையைக் காட்டிலும் பரிதாபமான நிலைமையிலுள்ள வேறு எவரையும் நான் எங்கும் காணவில்லை. இவர்களுடைய உதவியைக்கொண்டுதான் பெரிய முதலாளிகள் சர்க்கரை செய்யும் வியாபாரத்தில் ஏராளமான லாபஞ் சம்பாதிக்கிறார்கள். ஜர்மன் சண்டை நடைபெற்ற காலத்தும் அதற்குப் பிறகும் இவர்கள் சம்பாதித்த லாபம் கணக்கிலடங்காது. அதிக வருமான வரிக்கிடங்கொடாமல் லாபம் முழுவதையும் தாங்கள் அடையும் பொருட்டு கணக்குகளை சரிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு எஸ்டேட்டைத் தவிர மற்ற பேர்கள் ஏராளமான லாபத்தை யடைந்திருந்த போதிலும் வேலைக்காரர்களுடைய நிலைமையை உயர்த்தும் பொருட்டு மனதார யாதொருவிதமான ஏற்பாட்டையுஞ் செய்ததாக நான் அறியேன். மனித வாழ்க்கைக்குச் சற்றேனுமொவ்வாத குடிசைகளிலும் குச்சுகளிலும் வசிக்கும்படி இன்றைக்குத் தமிழர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். தமிழர்கள் வசிக்குமிடங்களில் சாக்கடை நாற்றமும் சுகாதாரக்குறைவும் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் வருணிக்கற்பாலதன்று. கக்கூசுகளின் ஆபாசத்தினால் அநேக உயிர்களுக்கு சேதமுண்டாகும்படியிருக்கிறது. எனது அனுபோகத்தைக்கொண்டு இலங்கைத் தோட்டங்களில் கூலியாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகள் நெடாலிலுள்ள நிலைமையைக் காட்டிலும் எவ்வளவோ விதத்தில் மேன்மையானதென்று உறுதி கூறுவேன். நான் நேரில் நெடாலில் பார்த்ததைக் காட்டிலும் சீர்கேடான நிலைமை பிஜித்தீவிலில்லை யென்று நான் நிச்சயமாய் சொல்லுவேன்.

தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி விகிதம் மிகவும் குறைவாயும் ஜீவனத்திற்கும் போதாததுமாயுமிருக்கிறது. 1914ம் வருடத்தில் யுத்தமாரம்பமாகி 6 மாதத்திற்கு முன் நான் நெடாலில் இருந்தபோது சாப்பாட்டுடன் வாரமொன்றுக்கு 20 அல்லது 30 ஷில்லிங்குகள் கூலியாள் ஒப்பந்தமில்லாத ஒரு இந்தியனுக்குக் கிடைத்துவந்தது. ஆனால் விலைவாசிகள் ஒன்றுக்கு மூன்று மடங்கும் சில அம்சங்களில் ஐந்து மடங்கும் உயர்ந்தனவேயன்றி கூலி மட்டும் முன்னளவாகவேயிருந்து வருகிறது. சாப்பாடுள்பட வாரமொன்றுக்கு 30, 40 ஷில்லிங்குகள் தான் கூலியாக வழங்கப்படுகின்றது. இதனால் விளையும் விபரீதங்களை நான் என் மட்டில் அறிந்துகொண்டதோடுகூட அந்நியர்களுக்கும் இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்துக் காட்டியுமிருக்கிறேன். தமிழ் தொழிலாளர்கள் வியாதியினாலும் சாப்பாட்டுக் குறைவினாலும் கஷ்டப்பட்டு வருகிறார்கள் சண்டைக்கு முன்னிருந்த நிலைமையைக் காட்டிலும் அவர்களின் தற்கால நிலைமை மிகவும் கேவலமாயிருக்கிறது. அவர்களின் நிலைமை, காபிரின நிலைமையைவிட தாழ்ந்துவிட்டதென்பதை நாம் நன்குணர்ந்து அதற்கொத்த பரிகாரங்களைத் தேடவேண்டும். பயிற்சி பெறாத தமிழ்த் தொழிலாளியைக் காட்டிலும் காபிர் மேலான கூலியை சம்பாதிக்கிறான். நான் நெடாலில் தமிழர்களுடன் நெருங்கிப் பழகினகாலத்து அவர்கள் தங்கள் குடும்பத்துடன் என்னிடம் வந்து "ஐயா, பாதிரி துரையே! மாதம் ஒன்றுக்கு முப்பது ஷில்லிங்கு கூலி வாங்கிக்கொண்டு எங்களுடைய குழந்தைகளுக்கு வேண்டியதை எவ்விதம் வாங்கிக்கொடுக்க முடியும்? கருப்புத் தோட்டத்தில் செய்யும் முரட்டு வேலைக்குத் தகுதியான ஒரு ஜோடி பாதரட்சை வாங்குவதற்கோ 5 ஷில்லிங்கு ஆகின்றது. இப்பெருந் தொகையைக்கொடுத்து வாங்கினும் அவைகள் அதிக நாள் நிலைத்திருப்பதில்லை. அவைகளைப் பழுது பார்க்க மற்றொரு 5 ஷில்லிங்கு பிடிக்கும். பாதிரியாரே! எங்களை இந்தியாவுக்குத் திரும்பியழைத்துப் போகத் தங்கள் கப்பல்களை வரவழைக்கமாட்டீர்களா? நாங்கள் எங்கள் ஜன்மபூமியாகிய பாரத நாட்டில் இதைவிட எவ்வளவோ மேலான நிலையிலிருந்தோம். என்று முறையிட்டுக்கொண்டார்கள். என்னாலியன்றவளவு உபகாரஞ் செய்வதாய் அவர்களுக்கு வாக்களித்தேன். நான் சொன்ன வாக்கை நிறைவேற்ற பூரண ஆவலுடன் இருக்கிறேன். பெரிய கஷ்டங்களை யனுபவித்துக் கஷ்டங்களோடு இந்தியாவுக்குத் திரும்பி வரும் நமது சகோதரர்களை தீண்டாச் சாதியென மதித்துக் கேவலமாக நடத்தாமலும் சாதியை விட்டுத் தள்ளாமலுமிருக்கவேண்டுமென்றும் சகோதரவாஞ்சையுடன் அவர்களை நடத்தவேண்டுமென்றும் நான் சென்னை மாகாண வாசிகளைப் பன்முறை கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்திய பொதுஜன அபிப்பிராயத்திற்கிணங்கி ஒப்பந்தக்கூலி முறையானது இந்தியாவிற்கு மிகுந்த கெடுதியை விளைவிக்கக்கூடியதெனக் கருதி இந்திய கவர்மெண்டார் அதை முற்றிலும் ரத்து செய்துவிட்டார்கள். அது அனுஷ்டானத்திலிருக்கும்போது நமது இந்தியர்கள் பட்ட கஷ்டங்களை எடுத்துரைக்க இயலாது. ஒப்பந்தமுறை அழிந்தபிறகேதான் சில இந்தியர்கள் நல்ல ஸ்திதியையடைந்தார்கள். ஆனால் பெரும்பான்மையோர் ஒப்பந்தக் கூலி முறைக்குட்பட்டிருந்ததினால் தங்கள் ஆண்மைத்தனமிழந்து தைரியமாய் முன்வர சக்தியற்றவர்களாகப் போய்விட்டார்கள்.

பிஜித் தீவில் தற்கால இந்தியர்களின் நிலைமையை நோக்குங்கால், இவ்வித பரிதாப நிலைமையே அங்குமிருக்கின்றது. பிஜித் தீவிலுள்ள ஜனங்கள் என்னிடம் வந்து எங்களைத் திரும்பியழைத்துப் போக கப்பல்களைக் கொண்டுவந்திருக்கிறீர்களாவென்று அடிக்கடி கண்ணுங் கண்ணீருமாய்க் கேட்டார்கள். இனியாவது இந்தியத் தொழிலாளரைக்கொண்டு ஏராளமான லாபமடைய நோக்கங்கொண்டிருக்கும் முதலாளிகளோடு எவ்விதத்திலும் சம்பந்தப்படாமலிருக்குமென்று எனது இந்திய சகோதரர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

சீர் திருத்தமும் வோட்டர்கள் பிரதிநிதிகள் கடமையும்

சென்ற வருடம் மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி பெருமானால் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட சீர்திருத்த சட்டம் வருகிற ஜனவரி மாதம் முதல் அனுஷ்டானத்திற்குவரும். அச்சமயம் புது சட்ட சபைகளும் நிர்வாக சபைகளும் ஏற்படுத்தப்படும். சட்ட சபைகளுக்குப் பிரதிநிதிகளை வோட்டர்கள் தெரிந்தெடுக்க வேண்டும். புது சட்டத்தினால் சுமார் 80 லட்சம் பேர்கள் நமது தேசத்தில் "வோட்" சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். நமதுஜில்லாவில் சுமார் 50 ஆயிரம்பேர்களுக்கு அந்தச் சுதந்திரத்தைச் சரியான வழியில் உபயோகிக்க ஸந்தர்ப்பம் ஏற்படப் போகின்றது. அப்பொழுது வோட்டர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் பலவுள. ஒவ்வொருவரும் "வோட்' என்னும் சுதந்திரம் இன்னதென்றும், "வோட்டரின் கடமைகள், இன்னவை யென்றும், தம்முடைய வோட்டை எப்பேர்க்கொத்த யோக்கியதை உள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும், தம்மால் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதியால் தமக்குச் சட்ட சபையில் காரியங்கள் நிறைவேற வேண்டுமென்று அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். நமது மாகாணத்தின் முன்னேற்றம் நம்மால் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் திறமை, யோக்கியதை, விடாமுயற்சி இவைகளைப்பொறுத்திருக்கின்றன. இதைத்தான் முன்னிட்டு தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அரசியல் முறை கூறுமிடத்து "இதனை இதனாலிவன் முடிக்கு மென்றாய்ந்ததனை யவன் கண் விடல்" என்று கூறியிருக்கிறார். இக்குறள் வாக்கியத்தின் தாத்பரியத்தை வோட்டர்கள் அனைவரும் நன்குணர்ந்து தங்கள் கடமையைச் செலுத்த வேண்டும்.

முதலில் நமது தேசத்தின் தற்கால நிலைமையை ஆராய்ந்து பார்த்தால் அதன் முன்னேற்றத்தைக் கருதி நாம் செய்ய வேண்டிய வேலை பலவிருக்கின்றன வென்பது நமக்கு நன்கு விளங்கும். நமது தேசத்தில் அதிலும் நமது மாகாணத்தில் வறுமை, பஞ்சம், தொத்து நோய்கள், கல்வி

யில்லாத் தன்மை முதலிய கஷ்டங்களும் துன்பங்களும் குடி கொண்டிருக்கின்றன. நமது தேசத்தின் முற்கால நிலைமையை யோசித்துப் பார்த்தால் மனதிற்குத் துக்கத்தை உண்டு பண்ணுகின்றது. நமது தேசத்தின் பிரிட்டிஷாரின் ஆளுகையில் சுமார் 150 வருஷ கால மிருந்து வந்தும் மேலே சொன்ன கஷ்டங்களும் மற்றும் பல துன்பங்களும் நம்மைப் பீடித்துக் கொண்டே வருகின்றன. இவைகளை எல்லாம் நிவர்த்திக்கும் பொருட்டு நமது தேச பக்தர்கள் வெகு நாளாய்ப் பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். சுமார் 35 வருஷங்களுக்கு முன் நமது தலைவர்கள் "இந்தியன் நாஷனல் காங்கிரஸ்" என்னும் ஒரு மகா சபையை ஏற்படுத்தினார்கள். அன்று முதல் அச்சபையின் வாயிலாய் ராஜரீக குறைகளையும் அதிகார வர்க்கத்தினரின் அட்டூழியங்களையும் அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்டுவதோடு நில்லாமல் பார்லிமெண்டு சபையில் அக்குறைகளை நன்கு கவனித்துப் பரிகாரங்கள் தேடும் வண்ணம் போராடி வருகிறார்கள். காங்கிரஸ் மகா சபையில் நமது நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கூடி ஆலோசனை செய்து பூரணமாய் விஷயங்களை விவாதித்த பிறகே தான், தீர்மானங்கள் செய்து இந்தியா கவர்ன்மெண்டாரவர்களுக்கும் இந்தியா மந்திரியவர்களுக்கும் பார்லிமெண்டு மகா சபைக்கும் அறிவிப்பது வழக்கம். அம்மாதிரி செய்து வந்ததின் பலனாக அப்போதைக்கப்போது சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்தன. அச்சீர்திருத்தங்களால் தேசம் அதிக நன்மையை அடையவில்லை. ஜனங்களின் கஷ்டங்களும் நீங்கவில்லை. அதிகார வர்க்கத்தினரின் எதேச்சாதிகாரமும் குறையவில்லை. நம் முறையீட்டுக்கு இசைபட்டு 1909-1910 வருஷத்தில் மிண்டோ பார்லி பிரபுக்கள் இந்தியாவிற்கு அளித்த சீர் திருத்தத்தினால் நம் தலைவர்களின் இஷ்டம் எவ்வாறும் பூர்த்தியாகவில்லை. நாம் உத்தேசித்த காரியமும் கை கூடவில்லை. ஆகவே தேசாபிமானிகளனைவரும் ஓயாமல் இது விஷயத்தில் முறையிட்டு முயன்று வந்தார்கள். இவர்கள் ஊக்கம் தேச முழுவதும் பரவி எல்லாம் ஜாதி மதஸ்தரும் ஒன்று பட்டு தங்கள் கோரிக்கையை வெளியிட்டார்கள். இதற்கிடையில் ஐரோப்பாவில் மகா யுத்தம் ஏற்பட்டது. அச்சமயம் இந்தியர்கள் நிஜராஜ விசுவாஸத்தோடு அரசு பெருமானுக்கு பல வழிகளில் தங்களுடைய செல்வத்தையும் தங்களுடைய வீரர்களையும் அர்ப்பணம் செய்தார்கள். போர்க்களத்தில் நமது இந்திய சகோதரர்கள் லட்சக்கணக்காய் மாண்டார்கள். தங்களுடைய வீரச் செயல்களால் வெற்றி அடைந்தார்கள். உலகத்தார் இந்தியர்களின் பராக்கிரமத்தை மெச்சினார்கள். பிரிட்டிஷ் மகா ஜனங்கள் இந்தியாவினிடத்தில் தங்களுடைய அன்பை வெளியிட்டார்கள். இந்தியர்களின் நிலைமையை கவனிக்க ஆரம்பித்தார்கள். இந்தியாவிற்கும் ஏகாதிபத்தியத்திலடங்கிய இதர நாடுகளுக்குச் சமானமான அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பல சமயங்களில் சொல்லியது மாத்திரம் போதாதென்று அறிந்து, தமது செய்கையிலும் நன்றி அறிவையும், காட்ட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதன் பயனாகத்தான் 1917 ௵ ஆகஸ்டு மாசம் 20 ௳ பார்லிமெண்டவர்களால் இந்தியாவிற்கு படிப்படியாக ஜவாப்தாரியான ஆட்சியை அமைக்க வேண்டுமென்று பகிரங்கமாய் ஒரு விளம்பரத்தை செய்தார்கள். அதன் பிறகு இந்தியா மந்திரியவர்கள் சில ராஜ தந்திரிகளுடன் இந்தியாவின் நிலைமையை அறிந்து கொள்வதற்கும் இந்தியாவிற்கு கூடிய சீக்கிரத்தில் பூரண சுயாட்சி ஏற்படும் பொருட்டும் எவ்வித ராஜரீக அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி தெரிந்து கொண்டு போவதற்காகவும் இந்தியாவிற்கு 1917 நவம்பர் மாதத்தில் விஜயம் செய்தார். இங்கு வந்து நமது ராஜப்பிரதிநிதியுடன் அநேக ராஜதானிகளுக்குச் சென்று அங்குள்ள பல தலைவர்களுடன் கலந்து பேசி அவர்களின் அபிப்பிராயத்தை தெரிந்து கொண்டார். பிறகு தானும் ராஜப்பிரதிநிதியவர்களும் சேர்ந்து ஒரு ரிப்போர்ட்டு தயார் செய்து அதில் இந்தியாவிற்கு அளிக்க வேண்டிய சீர் திருத்தங்கள் இன்னவை யென்பதை குறிப்பிட்டார். அதுதான் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர் திருத்தரிபோர்ட்டு என்று வழங்கி வருகிறது. எல்லா இந்தியர் சபையாகிய காங்கிரஸ் சபையை பின் பற்றிய வரும் எல்லா இந்திய மகமதியரின் சபையாகிய முஸ்லீம் லீக்கைப்பின் பற்றிய வரும் தயார் செய்து அனுப்பின சீர் திருத்த திட்டத்தைக் கட்டணம் செய்து அதில் சில அம்சங்களை மாத்திரம் ஒருவாறு ரிப்போர்ட்டில் ஒத்துக் கொண்டார்கள். தவிரவும் தேசத்தில் உள்ள மகா ஜனங்களெல்லோரும் மகாத்மா காந்தியவர்கள் ஆக்ஞைப்படி தயார் செய்து பார்லிமெண்டுக்கு அனுப்பின மகஜரைப் பற்றி ரிப்போர்ட்டில் ஒன்றுமே காணோமே. மாண்டேகு துரையவர்கள் பிறகு இங்கிலாந்திற்கு சென்ற பின் பார்லிமெண்டாரவர்களின் அனுமதியின் பேரில் ஒரு கூட்டு கமிட்டியை ஏற்படுத்தினர். அக்கமிட்டியின் முன் இந்தியத் தலைவர்களை விசாரிக்க வேண்டுமென்றும் தீர்மானித்து இன்னின்னார் சாட்சியம் கொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அதற்கிணங்கி நமது தலைவர்கள் தமது சிரமத்தையும் செலவையும் பாராட்டாமல் வெகு தூரத்திலிருக்கும் இங்கிலாந்திற்கு சென்றார்கள். கூட்டு கமிட்டியாரின் முன் தம் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். சாட்சியம் சொன்னதில் தலைவர்களுக்குள் அபிப்பிராயப் பேதங்கள் ஏற்பட்டு விட்டன. இதனால் சீர் திருத்த விஷயம் ரொம்பவும் கெட்டுப் போய் விட்டதென்பது சொல்லாமலே விளங்கும். சாட்சியம் சொன்னவர்களில் பலர் தேசத்தின் முன்னேற்றத்திற்கு தடைகள் உண்டு பண்ணக் கூடிய சில அபிப்பிராயங்களை அவைகளால் நேரிடும் தீங்குகளைக் கருதாமலே கூறினார்கள். நாம் கேட்டதைக் கொடுத்துத் தான் தீர வேண்டுமென்று வற்புறுத்த பயந்து, கிடைத்தது போது மென்று இருந்து விட்டார்கள். சிலர் கிடைத்ததே ஜாஸ்தி யென்றும் சொன்னார்கள். பூரண சுயாட்சிக்கு நமக்கு யோக்கியதை இல்லையென்று சொல்லவும் தலைப்பட்டார்கள். அனுபவமில்லை யென்றும் சொன்னார்கள். உள்ளதை உள்ளது போல் சொன்னால் உள்ளதும்போய் விடுமென்றும் பய முறுத்தினார்கள். இவர்கள்தான் மிதவாதிகள் இவர்கள் மற்ற தலைவர்களோடும் (பொது ஜன அபிப்பிராயத் தோடும்) ஒத்து போராடியிருந்தால் இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் சீர் திருத்த சட்டத்தைக் காட்டிலும் மேன்மையான சட்டம் கிடைத்திருக்கக் கூடுமென்று பல தலைவர்களுடைய அபிப்பிராயம். இன்னும் நமது ஸ்வதந்திரங்களை அதிகப் படுத்துவதற்கேற்ற மாறுதல்கள் கிடைத்திருக்கும். மிதவாதிகளின் அபிப்பிராயத்தாலும் செய்கைகளாலும் நமது முன்னேற்றம் ஒருவாறு தடைப் படுத்திருக்கிறதே என்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். காங்கிரஸ் தலைவர்களாகிய லோகமான்ய திலகர், கனம் படேல, ஸ்ரீமான் மாதவராயரவர்கள் மற்றும் பல பேர்கள் இந்தியாவின் நிஜ நிலைமையை நன்கு அறிந்து காங்கிரஸ் கொள்கைகளையே ஆதரித்து சாக்ஷியம் சொல்லி தைரியமாய் வாதாடினார்கள். அதிகார வர்க்கத்தினரின் பொறுப்பற்ற அதிகாரம் அடியோடு போய் விட வேண்டுமென்றும் சொன்னார்கள். இந்தியர்களுக்கு சுயாட்சி புரியும் படியான யோக்கியதை இருக்கிறது என்பதைப் பல திருஷ்டாந்தரங்களைக் கொண்டு நிரூபித்தார்கள். சட்டத்தில் பத்து வருஷ காலம் இந்தியருக்கு ராஜாங்க முறையில் பயிற்சியாக வேண்டுமென்றும், அதன் இறுதியில் அவர்கள் யோக்கியதை புனராலோசனை செய்யப் படுமென்று சொல்லியிருப்பது இந்தியர்களின் யோக்கியதைக்கும் அனுபவத்திற்கும் குறைவென்றும் காட்டினார்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சீர் திருத்த சட்டத்தினால் தேசத்தின் முன்னேற்றத்திற்கு சற்றுமே வழியில்லை என்றும் எடுத்து இவர்கள் கூக்குரலிட்டும் மிதவாதிகள் எதிர் பார்த்த வண்ணமே சட்டம் பார்லிமெண்டால் அங்கீகரிக்கப் பட்டதைக் காட்டினார்கள். பிறகு அமிருதஸரவில் நடந்தேறிய காங்கிரஸ்மகா சபையில் சீர்திருத்த சட்டத்தைப் பற்றி பாராமரிக்கப் பட்டு இந்திய மகா ஜனங்களுக்கு சீர் திருத்தம் திருப்தியைத் தரவில்லை யென்றும் அச்சட்டம் நம்மை எவ்விதத்திலும் ஏமாற்றி விட்டதென்றும் தீர்மானித்தார்கள். காங்கிரஸ் சபை கூடு முன்னர் இந்தியாவுக்கனுப்பப் பட்ட அரசுபெருமானுடைய ஸ்ரீமுகத்திற்கிணங்கி எம்மட்டில் அதிகார வர்க்கத்தினரோடும் அரசாங்கத்தாரவர்களுடனும் ஒத்துழைக்க முடியுமோ அம்மட்டில தான் ஒத்துழைக்க முடியு மென்றும் காங்கிரஸ் தீர்மானித்தது, நமக்கு கிடைத்திருக்கும் சீர் திருத்தங்கள் தேசத்தின் முன்னேற்றத்திற்கு ஒருக்காலும் போதாதென்று பொது ஜனங்களின் அபிப்பிராயம். நாம் உத்தேசித்த படி நம் காரியம் கை கூடும் வரையில் முறையிட்டே தீர வேண்டு மென்பது ஜனத் தலைவரின் உறுதி. அதற்கு அனுகுணமாகவே நமது பிரதி நிதிகள் சட்ட சபைகளில் வேலை செய்தால் தான் காங்கிரஸ் சபை தீர்மானத்தில் கண்ட நமது எண்ணங்கள் கை கூட வழியுண்டு. அதற்கு நாம் எடுத்துக் சொல்ள வேண்டிய முக்கியமான பிரயாசை யாதெனில் புதிதாய் கூடப்போகும் சட்ட சபைக்குள் காங்கிரஸ் தீர்மானத்தின் அபிப்பிராயத்தை வழி படும் தகுந்த பிரதிநிதிகளை தெரிந்து எடுத்தனுப்புவதே யாகும். இது நிற்க புதிதாய் ஏற்பட்டிருக்கும் சீர் திருத்த சட்டம் நமது மாகாண அரசாட்சியில் கூட நமக்கு பூரண ஜவாப்தாரி ஆட்சியைத் தரவில்லை. ராஜப்பிரதிநிதியின் விசாரணையிலுள்ள மத்திய கவர்ன்மெண்டிலோ யாதொரு விதமான மாறுதலையும் ஏற்படுத்த வில்லை. மாகாணத்தில் மட்டும் இரட்டை ஆட்சி (டயார்க்கி) என்கிற அதிகாரப் பிரிவினையை அமுலுக்குக் கொண்டு வர உத்தேசித்திருக்கிறார்கள். அதன்படி ஒதுக்கி வைக்கப்பட்ட இலாகா வென்றும் மாற்றப்பட்ட இலாகாவென்றும் அரசு புரியும் அலுவல்கள் பிரிக்கப் பட்டிருக்கின்றன.

மாற்றப்பட்ட இலாகாவின் வேலையை பார்க்கவும் அதிகாரம் செலுத்தவும் மந்திரிகள் நியமிக்கப்படுவார்கள். சட்ட சபை மெம்பர்களிலிருந்து கவர்னரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளோடு கூடவும் கவர்னர் அவருடைய நிர்வாக சபை மெம்பர்களோடும் விஷயங்களை ஆலோசித்து நிர்வாகத்தை நடத்தும்படி சட்டத்தின் கருத்து. சட்ட சபை மெம்பர்களையோ வோட்டர்கள் தெரிந்தெடுக்க பாத்திய முண்டு. ஆகையால் தான் ஜனங்களுக்கு மாகாணங்கள் சம்பந்தபட்ட மட்டில ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

மாகாண சட்ட சபைக்கு நம்பர்களை 10 ரூபாய் நிலத்தீர்வை செலுத்துவோரும் பட்டணங்களில் 3 ரூபாய் தொழில் வரி வீட்டு வரி, செலுத்துவோரும், ராணுவ பென்ஷன் பெற்றவர்களும், வருமான வரி செலுத்துவோரும் இம்மாதிரியான "வோட்" சுதந்திரத்தை அடைகிறார்கள். இந்த சுதந்திரத்தைவெகு ஜாக்கிரதையாய் உபயோகிக்க வேண்டும். பாத்திரனை அறிந்து கொடுக்கவேண்டும். ஜனங்களோடுநெருங்கிப்பழகினவர்களுக்கும் ஜனங்களின் கஷ்டங்களை அறிந்தவர்களுக்கும் "வோட்" கொடுக்கவேண்டும். சபையில் ஸ்தானம் பெற விரும்புவோருக்கு சுய நலம் கூடவே கூடாது. சுய நலம் பாராட்டாதவராயும் பயமன்னியில் தைரியத்தோடு உள்ளது உள்ளபடி பேசக் கூடியவராயுமிருக்க வேண்டும். கவர்ன்மெண்டாரிடத்தில் யாதொருவிதமான பிரயோஜனத்தை எதிர்பாராதவராயிருக்கவேண்டும். க்ஷேமத்தில் கவலையுள்ளவராயிருக்கவேண்டும். நல்லொழுக்கமுள்ளவராயிருக்கவேண்டும். பொது

ஜன ஊழியம் செய்வதில் ஊக்கமும், உத்ஸாகமும், சாவகாசமும் உள்ளவருமாயிருக்கவேண்டும். இம்மாதிரியான குணங்கள் குடிகொண்டவர்களை சட்டசபைக்கு பிரதிநிதிகளாக அனுப்பவேண்டும். "வோட்" கொடுக்கும்பொழுது ஒருவருடைய தாட்சண்யத்திற்கு கட்டுப்படக்கூடாது. அதிகாரத்திற்கு பயப்படக்கூடாது. பொருளாசை கொண்டு விற்கக்கூடாது சினேக பாவத்தை முன்னிட்டு ஆதரிக்கக்கூடாது. ஒருவருடைய மனஸ்தாபத்திற்குப் பயந்து நடக்கக்கூடாது. ஒரு ஸ்தானத்திற்கு சுயேக்ஷகர்களாய்ப் பலர் முன் வரும் பட்சத்தில் வோடனாகிய ஒருவ தீர்காலோசனை செய்து தன் மனசாக்ஷிக்கு விரோதமன்னியில் தன் வோட்டை உபயோகிக்கவேண்டும்.

ஏனெனில் தற்காலத்தில் தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்து தேசத் தொண்டு புரிவதற்குரியவரைத்தான் ஆதரிக்கவேண்டும். பாரத மாதாவின் மகா சபையாகிய காங்கிரஸில் கொள்கைகளை எவர் ஆதரிக்கிறார்களோ அவர்கள் தான் சட்ட சபையில். பெரிய காரியங்களை செய்ய முடியும். ஜனங்களின் க்ஷேமத்திற்கு விரோதத்தை விளைவிக்கக்கூடிய மசோதாக்களையும் யோசனைகளையும் அவர் தான் தைரியத்தோடு எதிர்ப்பார்கள். கவர்ன்மெண்டாரிடத்தில் தாட்சண்யத்தை பாராட்டமாட்டார்கள். கவர்ன்மெண்டார்களுக்கு கோபம் வராமல் நடந்துகொள்வதிலேயே கவலையுள்ளவர் பிரதிநிதியாயிருக்கலாயக்கில்லாதவர். மேலும் சட்டசபையில் ஸ்தானம் விரும்புவோரொருவரை இதுகாறும் தேசத்திற்கு யாது நன்மை செய்திருக்கிறார் என்று விசாரிக்கவேண்டும். அதோடு கூட தன்னை தெரிந்தெடுக்கும் வோடர்களுடைய க்ஷேமத்தைக் கருதி எந்தெந்தவழிகளில் பாடுபடப் போகிறாரென்றும் கேட்கவேண்டும். தன் மாகாணத்தின் தேவைகளையும் தன் ஜில்லாவின் குறைகளையும் நன்கு அறிந்திருக்கிறாரென்று பார்க்கவேண்டும். இம்மாதிரியாய் காண்டிடேட்டுகளை பரிக்ஷை செய்து தேசத்தின் முன்னேற்றத்தில் கவலையுள்ளவர்களை வோட்டர்கள் தெரிந்தெடுத்தால்தான் அப்பிரதிநிதிகளைக் கொண்டு அனேக நன்மைகளை அடையலாம். ஜாதி மத பேதங்களை மறந்துவிடவேண்டும். தேசாபிமானிகள் கிராமங்கள் தோறும் சென்று பொது ஜனங்களுக்கு இவ் விஷயத்தில் அறிவூட்டவேண்டும்.

தொழிலாளர் நிலையும் தலைவர்கள் கடமையும்.

இந்தியமன்னர்களின் ஆட்சியில் இப்பாரதநாடு இருந்தகாலத்தில் இங்குக் கைத்தொழில்கள் மிக்க சிறந்தன வென்பதற்குப் போதிய அத்தாக்ஷிகள் இருக்கின்றன. இவைகள் அந்நிய ஆட்சி இந்நாட்டில் வந்ததகாரணத்தால் கொஞ்சங் கொஞ்சமாக ஒழிந்தன. இந்தியாவில் கிழக்கு இந்தியா கம்பெனியார் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்களின் கொடுஞ் செயல்களால் இந்தியத் தொழில்களின் அழிவு ஏற்பட்டன வென்பதைப் பண்டித மதன்மோகன் மாளவியா அவர்கள் எழுதிய சிறப்புரையில் காணலாம். இந்தியாவின் அரசியல் நிர்வாகம் நமது மன்னர் பிரானிடம் மாறியும் மேற்குறிப்பிட்டபடி குலைக்கப்பட்ட தொழில்கள் விருத்தியடையும்படி ஒன்றும் செய்யப்படவில்லை. எனவே தற்பொழுது இந்தியாவின் தொழில்கள் க்ஷீணதசையிலிருக்கின்றன. ரௌலட் அறிக்கையைக் கொண்டு ரௌலட் சட்டம் செய்ய முன்வந்த அதிகாரவர்க்கத்தினருக்குத் தொழில் கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவர மனமேன் எழவில்லை என்பது தான் நமது வியப்பு!

நிற்க, இப்பொழுது தொழில்களில் பெரும்பாலும் ஆங்கில முதலாளிகளிடமேயுள. இம்முதலாளிகளிடம் இந்தியத்தொழிலாளர்கள் வேலைசெய்து வருகிறார்கள் ஆங்கிலமுதலாளிகள் இத்தொழிலாளர்களுக்கு எவ்வளவு குறைந்த சம்பளம் கொடுக்கக்கூடுமோ அவ்வளவு சம்பளம் குறைந்ததாக கொடுக்கிறார்கள் இந்த ஆங்கில முதலாளிகள் தொழிலாளர் மற்றைய நாடுகளில் எவ்வளவு நேரம் வேலை வாங்கப்படுகிறார்களோ அதைவிட அதிக நேரம் இந்தியாவில் தொழிலாளர்களிடமிருந்து வேலைவாங்குகிறார்கள். தொழிலாளர் சௌகரியங்கள் எம்மட்டில் கவனிக்கப்படவேண்டுமோ அம்மட்டில் கவனிக்கப்படவில்லை. சுருக்கமாக கூறுமிடத்து தற்காலம் இந்தியத் தொழிலாளர்கள் மிக்க எளிய நிலையிலிருக்கின்றார்கள்.

மற்றைய நாடுகளிலோ தொழிலாளர்கள் அரசாங்கத்தில பெரிய தொரு பாகத்தை ஏற்றுக்கொண்டிருப்பதால் அவ்வந்த அரசாங்கத்தார் அவர்களிடம் அஞ்சி நிர்வாகம் செய்கின்றனர். இத் தேயத்தை யாண்டுவரும் இங்கிலாந்திலும் கூட தொழிலாளரே அரசாங்கத்தில் சீக்கிரம் முதன்மை ஸ்தானம் பெறுவரெனத் தோன்றுகிறது. இங்ஙனமிருக்க இந்தியாவில் அரசாங்கத்தார் தொழிலாளருக்குப் போதிய உதவி புரிகின்றாரில்லை. ஏழைத் தொழிலாளர்கள் சங்கங்கள் கூட்டினால் இவைகளைக்கூட அராஜகக் கூட்டமெனக் கருதி அதிகார வர்க்கத்தினர் சந்தேகப்படுகின்றனர். இதனால் அதிகார வர்க்கத்தினர் தொழிலாளர்களுக்கு அச்சமுண்டாக்கி அவர்கள் ஒற்றுமையாயிருத்தலை கெடுக்கின்றார்கள்.

சில தினங்களுக்கு முன் வந்த தேசபக்தன் பத்திரிகையில் தொழிலாளிகள் தமபொழுது ஒன்றுகூடி தொழிலாளர் இயக்கத்தை ஒழிக்க முயல்கிறார்களென்று எழுதப்பட்டிருக்கின்றது. முதலாளிகள் அப்படி செய்தால் அது மிக்க மூடத்தனமான செயல் என்று நாம்கூற வேண்டுவதில்லை. தங்கள் செயலால், முதலாளிகள் தங்களுக்கே கேடு விளைத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

இச்சமயம் அரசாங்கத்தார் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளல் வேண்டும். இருகட்சிகளாகிய முதலாளிகள் பக்கமும் தொழிலாளர்கள் பக்கமும் அவர்கள் சேரா தொழிதலே நலம். முதலாளிகள் ஒருக்கால தங்கள் செல்வாக்கைக்கொண்டு அரசாங்கத்தாருடைய உதவியைப் பெற முயன்றால் அதற்கு அரசாங்கத்தார் இணங்கலாகாது. அரசாங்கத்சார் இதில் தலையிட நேரிட்டால் இருகட்சியினருக்கும் நன்மை ஏற்படும்படி முயற்சிக்கவேண்டுமேயன்றி அவர் எந்தக் கட்சியையும் சார்ந்திருத்தலாகாதென்பதை ஞாபகத்திலிருத்திக்கொள்வது அவசியமாகும். மேலும், தொழிலாளரின் எளிய நிலையை யுணர்ந்து அரசாங்கத்தார் அதை மேம்படச் செய்ய உதவவேண்டுவதோடு அவர்களுடைய சங்கங்கள் நசுக்கப்படாமல் காக்கப்படவேண்டும். ஏழைத் தொழிலாளர்களுக்கு அதிகாரிகளின் கூட்டுறவு அவசிய மென்று நாம் வற்புறுத்த வேண்டுவதில்லை.

இச்சமயத்தில், ஜனத் தலைவர்களும் செல்வாக்குள்ளவர்களும், தேசிய வாதிகளும், மிதவாதிகளும் ஒரு மனப்பட்டுத் தொழிலாளர் பால் உழைக்கவேண்டும். தொழிலாளர் பால் இவர்கள் புரியும் செயலே இவர்களுடைய தேசத் தொண்டில் முக்கியமானதாகும். அதிகார வர்க்கத்தினரிடம் செல்வாக்குள்ள மிதவாதிகள் தொழிலாளர்களின் கஷ்ட நஷ்டங்களை அவர்களிடம் எடுத்துக்கூற ஏன் முன்வரக்கூடாது?

இந்நாட்டில் தொழிலாளர்களின் முன்னேற்றமபெறாமல் நாம்முன்னேற்றமடைவது அசாத்தியமானது தொழிலாளர்கள்வறுமையில்மூழ்கியும் பிணியால்மாண்டும் படிப்பின்றி அஞ்ஞானமென்னும் இருளில் மயங்கியும்,அரசியல்ஞானமின்றியும்தவிக்கின்றார்கள். இவர்கள் மேம்பாட்டிற்குப்பற்பல விடங்களிலும் சங்கங்கள் ஏற்படுதல் இன்றியமையாதன இச் சங்கங்களை நடத்துவதற்குக் கூட இவர்கட்குப் போதிய சகதி இல்லை. ஆகையால் தொழிலாளர்களும் இவர்கள் மக்களும் படித்து முன்னேற்ற மடையவேண்டிய வழிகளைக் காண்பித்தல் நமது தலைவர்களின் முதற் கடமை எனபது எனது நோக்கம்.

முக்கியமாக ஒரு விஷயம் ஈண்டு குறிப்பிடத் தக்கது. ஐரோப்பியர்கள் நிர்வாகத்திலிருக்கும் தொழிற் சாலைகளில் நிறவேற்றுமை அனுஷ்டிக்கப் படுகிறது. இது பட்சபாத மற்றவர்களால் கண்டிக்கக் கூடியதாகும். இந்தியா சுதந்தர மற்ற நாடாகையால் தொழிளாளர்கள் தங்கள் சுய கௌரவத்தையும் சுதந்திரங்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை, ஆகையால் இவர்களுக்குப் பொது ஜன உதவி இன்றியமையாதது. கடைசியாக ஒரு யோசனை கூறுகிறேன். முதலாளிகள் தொழிலாளர் சங்கத்தவர்களை நிராகரித்து அவமானம் செய்கிறார்கள். இந்த விஷயம் அரசாங்கத்தார் கவனிக்க வேண்டும். தொழில் கமிஷனர் மூலமாக வேனும் அல்லது வேறு எவ்விதமாக வேனும் அரசாங்கத்கார் தொழிலாளர் சங்கத தலைவர்களோடு தொழிலாளர் சம்பந்தமான விஷயங்களை முதலாளிகள் யோஜிக்கச் செய்வது சாலவும் நன்று. தொழிலாளர்கள் ஒரு கால் முரட்டுத் தனமாக இருந்தாலும் அவர்கள் தலைவர்கள் சரி வழியே சென்று இவர்களை நடத்துவார்களென்பதில் சந்தேகமில்லை.

கே. சே. பால சுப்பிரமணியம்.

வர்த்தகமித்திரன் புக்டிப்போ,
தஞ்சாவூர்.

கன்னியின் முத்தம்	I	0—12-0
ஷெ	II	0—14-0
ஷெ	III	0—12-0
ஷெ	IV	0—12-0
சுந்தர் ராஜா அல்லது நட்பு		0—12-0
லாக்ர டீஸ் ,,		0—12-0
வியாஸவிகாணம் ,,		0—12-0
ரோஜாலி அல்லது தீவின் அரசி		0—12-0
மாலினி மாதவம்		0—10-0
ஒற்றன் ,,		0—10-0
நாடகவியல் ,,		0—12-0
ஆங்கில மாயாவிநோதக் கதைகள்		0—6—0
ரமணி ,,		0—8—0
மோகனு ,,		0—5—0
பவளக் கொடி ,,		0—3—0
அல்லி ,,		0—3—0
தேசிங்கு மன்னன் ,,		0—3—0
ராதாராணி ,,		0—2—0
ஜெயவீரன் ,,		0—2—0
இரண்மயி ,,		0—2—0
ஐங்கதைக் கொத்து ,,		0—4—0
சத்திய பாலதேவி ,,		0—1—0
அரிச்சந்திரன் ,,		0—2—0
பங்கஜாக்ஷி ,,		0—8—0
பிரக்லாதன் ,,		0—8—0
சின்னத்தம்பி ,,		0—4—0
விக்டோரியா நல்லரசி		0—2—6
அலாவுதீன் அற்புத தீபம்		0—2—6
ஐந்தாவது ஜார்ஜ் மகாராஜா மகிமை		0—2—0
சிம்பலீன் ,,		0—2—0
மாக்பெத் ,,		0—2—0
நற்பழக்கம் ,,		0—2—0
விரோணு நகரத்து விடர்கள்		0—2—0
நீதி கோபுரம் ,,		0—2—0
வேனிஸ் நகரத்து வர்த்தகன்		0—2—0
டிக்உன்டிங்டனும் அவன் பூனையும்		0—2—0
கர்மயோகம் ,,		0—2—0
மாயூரம் இடப தீர்த்தம்		0—2—0
40 திருடர்கள் ,,		0—3—0
உபோதம் காட்டிய கேர்மையும் ஊட்டிய போதமும்		0—2—0
ஆபத்தில் சிநேகிதன்		0—1—6
செங்கைவளவன்		0- 1—6
வீண்வம்பு ,,		0—1—6
சண்டியை சாதுவாக்கியது		0—1—6
வியாமோக விலாசம்		0—1—6
செம்படவன் ,,		0—1—6
மெய்தாசன் சரித்திரம் ,,		0—1—3
3 தங்கமாம்பழம் ,,		0—1—0
கண்ணும் கண்ணீரும்		0—1—0
பச்சை தேவதை ,,		0—1—0
நல்லமாப்பிள்ளை ,,		0—1—0
நாய்காட்டிய நல்லறிவு		C—1—0
கார்காலத்துச் சந்திரிகை		0—1—0
புலவர் வறுமை ,,		0—1—0
சண்டமாருதம் ,,		0—1—0
நான்கு பாடகர்கள் ,,		0—1—0
குசேலன் ,,		0—1—0

நைடிங் கேல் அம்மையார்		0—1—0
தாரில்லா கதவு ,,		0—1—0
ஸ்ரீ ருமஜனனம் ,,		0—1—0
காதர் அலி ,,		0—0—6
பிரசண்ட மாருதம் ,,		0—8—0
பிராப்டிங் னுக் யாத்திரை		0—6—0
லில்புட் யாத்திரை		0—4—0
லபுடா யாத்திரை ,,		0—4—0
ரஜபுத்திர ரத்தினம்		0—5—0
ஸ்ரீமத்வால்மீகிராமாயணம் சுந்தரகாண்டம்		1—10-0
ஷெ காலிகோ பயிண்டு		2—0—0
தனிப்பாசுரத் தொகை காலிகோ பயிண்டு		1—0—0
பாயிர விருத்தி		1—0—0
பாவலர்விருந்து சாதா பயிண்டு		0—8—0
ஷெ பாவலர் விருந்து காலிகோ பயிண்டு		1—0—0
ஸ்ரீ வைஷ்ணவகிரந்த மோக்ஷம்		2—0—0
நித்தியாது சந்தானம்சந்தானம்		1—8—0
கம்பர் ,,		0—12-0
முத்துக்குமாரசாமிபிள்ளைத் தமிழ்		0—6—0
அசோகா ,,		0—4—0
சுகுண தீரன்	I	1—0—0
ஷெ	II	1—4—0
அஞ்சனாக்ஷி	I	1—0—0
ஷெ	II	1—4—0
மேஹலதா		1—0—0
சாணக்கிய சாகஸம் அல்லது சந்திர குப்த சரிதம்.		1—4—0
ஐரோப்பிய மகா யுத்தம்		1—8—0
ராஜ சேவையும் இந்தியரும் ஜஸ்டிஸ் அப்துல்ரகிம் மறுப்புரை		2—0—0
மிருச்ச கடிகம்		1—8—0
கலாவதி ,,		1—8—0
தமிழ் மொழியின் வரலாறு		2—0—0
ஸ்ரீயார்கக்ஷத்திரிய குலப்பிரகாசிகை		1—4—0
ஆங்கில சிரோமணிகள்		0—12-0

நாவல்கள்

மானவிஜயம் ,,		0	8	0
ஔவை ,,		0	6	0
கோகிலே தொகுதி பகுதி	I	0	4	6
காரைக்கால் அம்மை		0	1	0
திருக்குறள் நீதிக் கதைகள்		0	6	0
கோபால கிருஷ்ண கோகிலே சரிதம்		0	8	0
ஆர்யமத உபாக்கியானம்	I	0	8	0
Do	II	0	10	0
இந்துப் புண்ணியக் கதை	I	0	8	0
ஷெ	II	0	8	0
விவேக சந்திரிகை		0	4	0
ஹிதோபதேசக் கதைகள்		0	2	0
சமயல் நூல்	I	0	8	0
ஷெ	II	0	8	0
கதையும் பாட்டும்		0	4	0
விசித்திர விநோத ஹாஸ்ய மஞ்சரி		0	2	0
தாலாட்டுக்கண்ணிகள் எக்காலக்கண்ணிகள்		0	1	0
சின்ன மணி பெரிய மணி என்னும் சகோதரிச் சரித்திரம்		0	2	0
ஸ்திரீ சரிதம்		0	2	0
பாலகர் செய்யுள்		0	0	9
தாரை நூல்		0	4	0
சுகவழி		0	1	3
கிராம அரசாக்ஷி		0	3	0
சுவாமி விவேகானந்தர்		0	2	0

கற்பின் மேன்மை.

பண்டிதர் உலகநாதபிள்ளை எழுதியது.

கல்வியிற் சிறந்தோர் பலர் கற்புடைய மங்கையரைப்பற்றி முன்னமே எவ்வளவோ எழுதியிருக்கிறார்கள். ஆனால், நம் நாட்டு நங்கைமார்களில் எல்லோரும் அவற்றை அறிந்திருப்பார்கள் என்று சொல்வதற்கிடமில்லை. இன்னும், கற்பு என்பதை இன்னதென அறியாதவரும் இருக்கின்றனர். ஆதலால், கற்பையும், கற்புடைய மகளிரையும்பற்றி, முன்னோர் மொழிந்தவற்றைக் கடைப்பிடித்து, நானும் சிறிது எழுதத் தொடங்கினேன்.

'கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை' என ஔவையார் கூறியதற்கு இணங்க, கற்பு என்றால் கணவன் கற்பித்தபடி நடத்தல், அதாவது, நாயகன் சொல்லைத்தட்டாமல் அதற்கு அடங்கி நடப்பது என்பது பொருளாகும், கற்பு என்றாலும் பதிவ்ருதா தர்மம் என்றாலும் ஒன்றுதான். கண்ணிற்கு ஒளிபோலப் பெண்ணிற்குக் கற்பு அவசியமானது. கணவன் சொற்கடங்கி நடப்பதே தர்மமும் தவமுமாதலால், பெண்கள், வேறு தர்மும் தவமும் செய்வது மிகையாகும். கற்புள்ள மங்கையரை மூன்று காலமும் உணர்ந்த தத்துவ ஞானியினும் மேலாகச் சொல்லவேண்டும். 'குலமகட்குத் தெய்வம் கொழுநன்' ஆதலால் அவன் எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருப்பினும், அலட்சியம் செய்யாமல் 'புல் என்றாலும் புருஷன். கல் என்றாலும் கணவன்' என நினைந்து, அவனை தெய்வமாகப் பாவித்து, அச்சமும் அன்பும் பெருக வழிபடுவார்கள், இம் மங்கையர் பெய் என்றால் மழை பெய்யும். தேவர்களும் இவர் இட்ட கட்டளையைத் தட்டாமற் செய்திடுவர். பிறந்த குலமும் புகுந்த குலமும் இவரால் நற்கதியடையும். இவ்வுத்தம மங்கையர் தம் நாயகரையே தமது உயிராகக்கொண்டவராதலால், குளத்தில் படர்ந்த தாமரையும் அல்லியும் நீர் நிறைந்துள்ள பொழுது, செழித்துத் தழைப்பதும், நீர் வற்றும்போது வாடி அழிவதும் போல, அவர்க்குத் துன்பம் நேர்ந்தால் தாமும் துன்புற்றும் இன்பம் வந்தால் சிரித்தும் வாழ்ந்திருப்பார். இத்தகைய பெண்மணிகள் பலருள் சாவித்ரி சரிதத்தை இப்பொழுது கூறுகின்றேன்.

சாவித்ரி.

மத்திர தேசத்தில் அசுவபதி என்னொரு அரசன் இருந்தான். அவனுக்கு நெடுநாளாய்ப் புத்திரப்பேறு இல்லை. அதனால் சாவித்ரி தேவியை வழிபட்டுவர, அவளது வரத்தால் பிறந்வர் சாவித்ரி என்னும் நங்கை. இவர், கற்புக்கனிகலமும் பொற்புக் குறைவிடமுமாக வளர்ந்து பன்னிரண்டு வயதாக இருக்கையில், மகதி என்னும் வீணையில் வல்ல நாரத முனிவர் அரசசபையை அணுகினர்.

அரசன் இருக்கை விட்டெழுந்து, எதிர்சென்று வணங்கி, முகமனுரைத்து அர்க்கிய பாத்தியங்கள் கொடுத்து, ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து தானும் ஒருபுறம் இருக்கையில், வழக்கம் போலத் தந்தையைக்காணவந்த சாவித்திரிக்கு, புண்ணியம் பலிதமாகும் காலமாதலால், முனிபுங்கவரது தரிசனம் கிடைக்கராயிற்று. நல்லோரைக் காண்பதுவும் நன்றென்பர். இந் நல்லோரது வருகை ஒரு நன்மைக்கு ஏதுவாதல் வேண்டும், இவரைக் கணக்கிட்டதே இந் நாளே நன்னாகும்' என நினைந்து, அன்பும் ஆர்வமும் பெருக முனிவரைக் கை குவித்துவணங்கி அனுமதிபெற்றுத் தந்தையை தொழுது, மிக்கவிநயத்துடன் ஒரு புறம் ஒதுங்கி நின்றனர் சாவித்திரியம்மை.

அச்சமயத்தில்மன்னன் நாரதரை நோக்கி 'முனிசிரேஷ்டரே' என் மகள் சாவித்திரிக்கு இப்பொழுது வயது பன்னிரண்டு தக்க நாயகன் இன்னும் கிடைத்திலன்; அதுவே எனக்குப் பெருங் கவலையாயிருக்கின்றது. அதனைப் போக்கும்வகை இன்னதெனத் தெரிந்திலேன்' என்றனன்.

அரசே! வேந்தர்க்கு ஏற்பட்ட விவாக முறையை மறந்துவிட்டனே. அரசர்களுக்குச் சுயம் வரமன்றோ உரித்தானது. அன்றியும் நீ தெரிந்தெடுத்த ஒருவன் நின் மகள் மனதிற்கு இசையாதவனாகயிருப்பின், அவ்விருவர் மணம் எவ்வண்ணம் இன்பம் பயக்கும்? ஆதலால், நீ மணமகனைத் தேடுவதைவிட்டு, நின் மகள் வரிக்கும் ஒருவற்கு அவளை மணஞ்செய்விப்பதே தக்கது. அதுவே உன் மனக்கவலை தீர்க்கும் மருந்து' என்றருளினர்.

கேட்டபொழுதே கவலைக் கடலின் கரையைக்கண்ட அசுவபதி, மகள்முக நோக்கி, 'மரபை விளக்கவந்தமணிபோல்வாய்! முனிவர் கூறியவாறு சுயம்வரம் ஏற்படுத்துவேன்; உன் மனதிற்கிசைந்த ஒருவனை நீயே வரிப்பாயாக. இதனை முன்னிட்டு உன் கருத்தைத் தெரிந்துகொள்வதும் எனக்கு இன்றியமையாதது. ஆதலால் மனத்திலுள்ளதை உள்ளவாறு உணர்த்துக' எனக் கேட்டனன்.

நாணத்தால் தலை சாய்த்து நின்று தரையைக் காற் பெரு விரலால் கிளைத்திருந்த சாவித்திரியம்மை, பெரியோர்களிடத்தில் பொய் சொல்வது தகாதென அறிந்தவராதலால், நாணத்தைவிட்டு, 'எந்தையே! முன்னொரு நாள் உய்பான வனத்தில் தோழியோடு சல்லாபம் செய்திருந்தேன். உயிர்ப்பாங்கி எல்லா தேயத்தரசர்களின் இயல்பை எடுத்தியம்பினள். எடுத்துரைத்தவர்களில் சாலுவநாட்டு மன்னன் மகன் சத்தியவான் என் மனதிற்கு இசைந்தவராக இருந்தமையின், அவரை என் மனதார வரித்திட்டேன்' என்றனர்.

அப்பொழுது முனிவர் கூறுவார் உன் மகள் வரித்த சத்தியவான், தூய மனமும் பொய்யாத நாவும் கல்வியிற் சிறந்த நல்லறிவும், காமனை ஒத்த கட்டழகும் உடையவன்; ஆனால் உலகிற்கு ஒளிகொடுக்கும் மதிக்கும் களங்கம் இருப்பதுபோல, இவனுக்கும் ஒரு குறை உண்டு; அதாவது அற்பாயுசு. எல்லாம் நிரம்பப்படைத்த நான்முகன் வாழ் நாளை மட்டும் குறையாக்கினன் பாவம்! அந்தோ! அவ்வாயுளும் இன்றுதொட்டு ஓரே வருடந்தான் இருக்கின்றது. இதற்கு யாது செய்வது' எனப் பரிவோடு கூறினர்.

கேட்ட வேந்தன் திடுக்கிட்டு மகள் முக நோக்கி, 'கண்மணியிற் பாவை ஒப்பாம்! முனிவர் வந்ததும் அச்சமயத்தில் நீ வர நேர்ந்ததும் என்ன ஆச்சரியம்! அவர் வருகை எவ்வளவு நன்மையாக முடிந்தது பார்த்தனையா? அவர் வந்திராவிடின் உன் கதி எவ்வாறு முடிந்திருக்கும்? இன்னொன்று சொல்லுகிறேன் கேள், நீ வரித்த சத்தியவான் தந்தை சாலுவன், தன் நாட்டைப் பகைவர்கள் கைக்கொள்ளக் கண்ணிழந்து மனைவியோடு கானகத்தில் வசிக்கின்றான். இதனால் சத்தியவானுக்கும் உண்ண உணவும் இருக்க இடமுமில்லை. என்றாலும், உன்னை மணம் செய்து தரலாமென்றால் ஆயுளும் பஞ்சையாயிருக்கின்றான். ஆயுளின் எல்லையை அறிந்த பிறகும், உன்னைக்கொடுக்க என் மனம் எப்படித் துணியும்? உலகில் வேறு மன்னர்கள் இல்லாமற் போகவில்லை. எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர். அவருள் ஒருவரை வரிப்பாயாக' என்றனன்.

சாவித்திரியம்மை புன்னகை செய்து "தந்தையே! என்ன அறியாதவர் போலப் பேசுகின்றீர்கள்? பாங்கி சொல்லிய பொழுது சத்தியவான் குணமும் செய்கையும் பிறவும் என் மனதிற்கு இசைந்திருந்தபடியால், அப்பொழுதே அவரை என் நாயகராக மனத்தில் வரித்தேன். இருவரை வரிப்பது இராஜ கன்னியர்க்கு ஏற்குமெனில், நானும் பிறரை எண்ணுவேன். மனதாரத் துணிந்து வாயாரச் சொல்லியயினும் மெய்யாறப் பரிசிப்பது மேலாமோ? இவ்வுறுதிமனம் பரிசித்த பின்பல்லவா மெய்ப் பரிசம் நிகழ்கின்றது. மனம் காதலிக்காத ஒரு பொருளை மெய் தீண்டினும் அதனிடத்தில் விருப்பம் உண்டாகிறதில்லை. இது யாவரும் அனுபவத்திற் கண்டதுதானே. ஆதலால், என் உள்ளத்தால் வரிக்கப்பட்டவரே என் நாயகராவர். அவர் இன்னும் ஒரு வருடத்தில் இறந்தாலும் சரி, அவரையன்றிப் பிறரை வரித்திடேன். அல்லது நெடுங்காலம் வாழ்ந்திருந்தாலும் சரி, இது சத்தியம்" என்றனர்.

உலகத்தில் உள்ள சாமானியமான பெண்களில் தன் மகளையும் ஒருவராக நினைந்து அரசன் வாட்டமுறக்கண்ட முனிவர், பார்த்திபனே! உன் மகளைப் போலும் கற்புடையார் எவர்? சத்தியவான் அற்பாயிசுடையவன் எனினும் உன் மகளின் பதிவிர்தா தன்மம் வீண்போமா? இவளைப் போல் மனவுறுதி உடையாரை நூலினும் கண்டறியேன். அருந்ததியும் இவட்கு நிகராகாள். இன்னும் சொல்லுகின்றேன்

விதியை மதியால் வென்றவரும் உண்டு. உன் மகள் அனுட்டித்த விரதபலன் அவளால் வரிக்கப்பட்டவனை ஆயுஷ்மானாகச் செய்தலுங் கூடும் ஆதலால், அரசே! இனிச் சிறிதும் தாமதமின்றி உன் மகளைச் சத்தியவானுக்கே மணஞ் செய்து தருக' எனக்கூறித் தம துலகடைந்தனர்.

வேந்தனும் தன் மகள் சாவித்திரியைத் தேர் மீதேற்றிச் சென்று, சாலுவன் வாழும் கானகமடைந்து, சத்தியவானுக்கு விதிப்படி மணஞ் செய்து கொடுத்து, தன் நகரம் அடைந்தான்.

வர்ண இயல்பு.

நமது இந்து தேசத்தின் கண் தொன்றுதொட்டு வர்ண வியவஸ்தை நடைபெற்று வந்ததென்பதற்கு இருக்வேதத்தினதோர் பகுயான புருஷஸூக்தமே சான்றாகும். அந்நூலின் கண் விராட் புருஷனுக்குப் பிராமணனை முகமாகவும் க்ஷத்திரியனைப் புயமாகவும் வைசியனைத் துடையாகவும் வர்ணித்துக் கடைசியில் சூத்திரன் அப்புருஷனது கால்களினின்றும் தோன்றியதாய்க் கூறப்பட்டுள்ளது. அதுவே வெகு காலத்திற்குமுன் இந்து தேசத்திற் குடியேறிய ஆரியரென்னும் மகா ஜனங்களது பிரமான நூலாகும். அவ்வாரியர்கள் தங்களுக்கு முன்னரே உலகத்திற்றோன்றிய மகா ஜனங்களினும் நடை யுடை பாவனை யறிவு முதலிய வற்றில் அதிகமாய் முன்னேற்ற முற்றவரென மதிக்கப் பெற்றனர். அவர் தம்முட் சிலர் ஸத்துவ குணம் மேலிட்டு அத்யாத்ம வித்தையிற் பழகி வந்தனர்; சிலர் ஸத்துவ குணங் கலந்த ரஜோ குணம் மேலிட்டவராய்ச் சத்துருக் களினின்று தம்மவரைக் காத்தற் பொருட்டு யுத்தப் பயிற்சி முதலிய வற்றிற் புகுந்தனர்; மற்று முள்ளவர்களோ தமோ குணங்கலந்த ரஜோ குண முற்றவராய்க் கிருஷி வாணிப முதலிய வற்றைக் கைக் கொண்டனர். இவர்கள் பரம்பரையாய்த் தந்தந் தொழிலைக் கைப் பற்றவே அம்முறையே பிராமண ரென்றும் க்ஷத்திரிய ரென்றும் வைசிய ரென்றும் பெயர் பெற்றனர். ஆரியர்களாகிய இவர்களுக்கு மாத்திரம் பிராமண குருவை நாடிச் சென்று உப நயன ஸம்ஸ்காரம் பெற்று வேத மோதுவதற்கு அதிகார மிருந்தது. இவ் வழக்கம் புருஷர்களுக்கே யன்றி ஸ்திரீகளுக்கு முண்டு. அது பற்றியே பிரம்ம வாதினிகள் அக் காலத்திலிருந்த தாய் இப் பொழுதும் நாம் கேள்விப் படுகிறோம். இவ்வாரியர்கள் இத் தேசத்திற்கு வருமுன் இங்கு வெகு காலமாய் வசித்து வந்தவர்கள் பெரும்பாலும் திராவிடராவார். அவர்களுள் க்ஷத்திரியர் களென்றும் வைசியர்களென்றும் கூறத் தக்கவர்கள் பலிருந்தனர் அத் திராவிடருக்கோ ஆரியர்களைப்போல் வேதப் பயிற்சியின்மையால் அதற்கு இன்றியமையாத உப நயன ஸம்ஸ்காரம் கிடைத்திலது. அப்படிப் பட்டவர்களை ஆரியர்கள் சூத்திர ரென்று அழைப்பா ராயினர்.

இத்தேசத்திலே இக்காலத்தில் வந்து வசிக்கும் அங்கிலேயரது வீட்டுவேலைகளில் அமர்ந்துள்ளார் பெரும்பாலும் மற்றவரினும் அறிவிற்றாழ்ந்துள்ள சிறு பான்மையரேயாவார். அதுபோல் அக்காலத்திலும் இத்தன்மையரான திராவிடர் சிலர் அவ்வாரியர்களுக்குத் தொண்டு புரிந்து வந்தனர். அவர்கள் தமக்குத் தாஸராயினது பற்றியும் அவர்களது அறிவின்மை பற்றியும் தமோ குணமிகுதியைக் கண்டு தமக்குத் தொண்டு புரிதலையே அவர்களுக்குத்தொழிலாக்கினர். இப்படிப் பல காலஞ்செல்ல ஆரியர்கக்கும் தம்போற் பல அந்தஸ்துக்களிலுமிருந்து வந்த திராவிடருக்கும் பழக்கமிகுதியுறவே திராவிடப்பெண்களை ஆரியர் மணம்புரிந்து சந்ததி பெறுகலாயிற்று. அப்போது ஆரியாது ஸ்திரீவர்க்கத்திற்கு எண்ணிக்கையிற்சிறிது குறைவு நேர்ந்தது போலும். அக்காலந்தொட்டு ஸ்திரீகளுக்கும்சூத்திரர்களுக்கும் போன்று வேதமோதுதல் தகாதென ஆரியமக்கள்வற்புறுத் தியுள்ளார். அப்போதுதான் அநுலோமஜாதியும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தெனலாம். இத்தேசம் எல்லாப்படியாலும் உயர்ந்த நிலைமைக்கு வருதற்கு இந்நான்கு வர்ணத்தினரும் அவசியமாயினர். அது ஈசுவரனுக்கும் சம்மதமேயன்றோ? அதைத்தான் குணகர்மங்களின் விபாகத்தைக் கொண்டு நான்கு வர்ணங்களையும் அமைத்துள்ளேன் என்று பகவான் அர்ஜுனனுக்கு அருள்செய்தார். இங்கனம் ஆரியர்களும் மற்றவர்களும் கலந்து பழகவே ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் ஆத்மஞானத்தினது அபிவிருத்தியை வேண்டிப் பதினென்புராணங்களையும் பாரதமென்னும் ஐந்தாம் வேதத்தையும் வியாஸபகவான் செய்தருளினர்.

அவ்வக்காலத்து ஆசாரத்துக் கேற்ப ஸ்மிருதி நூல்களும் வெளிப்போந்தன. ஆகவே அக்காலத்தில் ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் வடமொழிப் பெயற்சி ஸகஜமாயிருந்ததெனக் கூறாதே விளங்கும். அவ்வாரியர்கள் தென்னாட்டிற் புகும்போது அங்குத் தமிழ் மொழி பிரபலமாயிருக்கக் கண்டு அம்மொழியைத் தாமுமேற்று சுருதிஸ்மிருதி புராணங்களின் கருத்தை அம்மொழிவழியே வெளியிட்டனர். இதுவன்றி சைவவைஷ்ணவ ஆசமங்களிற் கண்ட தீக்ஷைகளை ஸத்துவ குணமேற்ற திராவிடர் சிலர் பெற்று ஆரியரினு முயர்பதவியெய்தினர். ஆரியருட்கண்ட க்ஷத்திரிய வைசியங்களைப்போ இப்போது காண்பது அரிதாய் விட்டது. பிராமணரோ வெனில் பிறப்பு மாத்திரத்தால் பெருமை கொண்டாடுவதன்றி குணகர்மங்களினால் தமதுரிமையைக் காட்டுவது அதனினுமிக்க அரிதாய் விட்டது. ஆகவே ஆரியருக்கும் திராபிடருக்கும் எவ்வாற்றானும் ஏற்றத்தாழ்ச்சி கூறுதற்கில்லை. இதுவும் ஈசுவரனுக்குச் சம்மதமேயெனலாம.

அவ்வப்போது பிரதேசத்தார் படையெடுத்தோ வியாபார முறைமைபற்றியோ நமது தேசத்திற் புகுந்து நம்மையாளத் தலைப்பட்டனர். அவர்களுட் சிலர்நம்முடன் பழகி நாகரிகமேற்று நமது தேசத்திலேயே இப்போதும் வசித்து சகோதரவுரிமை பாராட்டிவருகின்றனர். வேறு சிலராகிய ஆங்கிலேயர்களோ கல்வி கேள்விகளிலும் கைத்தொழின் முறைகளிலும் வியாபாரத்திலும் ராணுவப்பயிற்சியிலும் நம்மிடத்திற் பல விஷயங்களைக் கற்றுத் தமக்குச் சொந்த மாக்கிக்கொண்டது மன்றி நம்மையாளு முகத்தானே அவ்விஷயங்களில் நம்மைத் தலையெடுக்க வொட்டாது தடையுறுத்துகின்றனர். அதுவன்றியும் தங்கள் நோக்கத்திற்கேற்பப் பிராமணரென்றும் பிராமணரல்லாதாரென்றும் நம்மைப்பிரித்து ஒருவரோடொருவர் பகையுறச் செய்கின்றனர். நமது தேசத்து ஆரியர்களுக்குத் தொன்றுதொட்டுத் திராவிடருடன் ஒத்துழைக்கவே கருத்திருந்ததென மேலே கூறியவாற்றால் தெற்றென விளங்கும். ஆகவே உள்ளபடி நம்மவருள் ஏற்றமோ தாழ்ச்சியோ இல்லையென்பதை யுணர்ந்து நமது ஒற்றுமைக்கு ஊறுபாடின்றி நாம் நடத்தல் வேண்டும். ஸமயமுறைமையாலும் ஆசார முறைமையாலும் ஒவ்வோர் சம்பிரதாயம் ஒவ்வோர்கூட்டத்தார்தம்முள் நடைபெற்று வருகிறது. அதன்படிக்கு ஆகார நியமங்களிலும் விவாகமுறைகளிலும் பண்டைக்காலத்திய சுருதிஸ் மிருதிவசனங்களுக்கு மாறாகச்சிற்சில வழக்கங்கள் நம் ஜனங்களுக்குள் ஏற்பட்டிருப்பது ஸகஜமே. அவற்றைக் கொண்டாடுகிறவர்களைத் தடுக்க எவருக்குமதிகாரமில்லை. இவ்வழக்கம் வெவ்வேறினத்தாருக்கும் வேறுவேறிருந்தவரினும் அவர் தம் முன் பொதுநன்மையை நாடி உழைப்பதற்கு யாதொருதடையும் இது காறும் இருந்ததெனத் தெரியவில்லை. அப்படியிருக்கப்பிரதேசத்தியவரது சௌரிகயத்திற்காக நாம் நமக்குள் வேற்றுமை பாராட்டுவது நமக்கே வெட்கக் கேடல்லவா? ஆகவே நமது தேசத்தாரது ஜகமத்தியத்தை முற்றிலும் நாம் தேடிக்கொள்வது மன்றி நம்மோடு மாறாக நிற்கும் ஆங்கிலேயரையும் சிறுகச் சிறுக நம்முடன் சகோதர வுரிமைபாராட்டி ஒத்துழைக்குமாறு நடந்து கொள்வோமாக.

இங்ஙனம்
தஞ்சை வேலு

தேவை.

சந்தாதாரர்களை சேர்க்கவும் விளம்பரங்களை சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
எல்லையம்மன் கோவில் தெரு,
தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.